வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.07.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 218 | பக்கங்கள் : 16




# நிதி அமைச்சராக பஸில் நேற்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூலை 09

பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

## மஹிந்தவுக்கு புதிய பதவி

பஸில் ராஜபக்ஷ நேற்று பராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்கு முன்னர் அமைச்சராகப் பதவியேற்

15



# கசப்பான சம்பவங்கள் அரங்கேறும் பழிவாங்கும் எண்ணம் இல்லை

## பதவியேற்ற கையுடன் பஸில் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 09

"எவரையும் பழிவாங்கும் எண்ணம் என்னிடம் அறவே இல்லை. ஆனால், தீர்மானங்களை எடுக்கும்போது தந்தை ஒருவரைப் போன்று சில நேரங்களில் கசப்பான விடயங்களைச் செய்ய வேண்டியேற்படும்."

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

15



## சபாநாயகர் முன்னிலையில் எம்.பியாக பஸில் பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 09

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்தார்.

2015ஆம்

15

## ஜனாதிபதி, பிரதமர் தவிர்ந்த யாருக்கும் அடிபணியேன்

### பாராளுமன்றில் அமைச்சர் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 09

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வலுசக்தி அமைச்சராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். எனக்கு மேல் இவர்கள் இருவர் மட்டுமே உள்ளனர். வேறு எவருக்கும் நான் அடிபணியமாட்டேன்" என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்

15

## யாழ். மாவட்டத்தில் 4 நாள்களில் 38,456 பேருக்கு கோவிட் தடுப்பூசி

யழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்.மாவட்டத்தில் நேற்று மேலும் 7,497 பேருக்கு சினோபார்ம் கோவிட் 19 தடுப்பூசி போடப்பட்ட நிலையில் நான்கு நாட்களில் மொத்தம் 38,456 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்

15

## யாழ்.மாவட்டத்தில் 16 பேர் உட்பட வடக்கில் 32 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணத்தில் 16 பேர் உட்பட வடக்கில் 32 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 27 பேரும், யாழ்.

15

## உயர்தர பரீட்சை நடைபெறுமா? ஆலோசனையின் பின்பே முடிவு

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஜூலை 09

எதிர்வரும் ஒக்ரோபரில் நடைபெறவிருக்கும் க.பொ.த உயர்தர பரீட்சையை ஒத்திவைப்பதா அல்லது நடத்துவதா என்பது தொடர்பில் கலந்துரையாடல்களின் பின் முடிவெடுக்கப்படும் என கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

15

## யாழில் மேலும் பல பிரதேசங்கள் மீள்குடியமர்வுக்காக விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

உள்நாட்டுப் போர் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ள மக்களின் விவரங்களை இறுதிப்படுத்தும் பணி பிரதேச செயலகங்களினால் முன்னெடுக்கப்படுகிறது.

இதுதொடர்பில் மேலதிக மாவட்ட செயலாளர் சு.முரளிதரன்

15

## ஆளுங்கட்சியின் துணை கொறடா சாகர காரியவசம்

கொழும்பு, ஜூலை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சாகர காரியவசம், ஆளுங்கட்சியின் துணை கொறடாவாக நியமிக்கப்பட்

15

## 40 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 40 மரணங்கள் பதிவாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்

15

## 1,223 பேருக்கு நேற்று கொரோனா

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,223 பேர் நேற்று அடையாளம் காணப்

15



# இப்படியும் நடக்கிறது...!

ஒருவர் தனது நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு சென்றிருந்தார்.அங்கே இருந்த நண்பர்கள் இவரை கலாய்க்க தொடங்கினர்.

“எல்லாரும் உங்களை முட்டாள்னு சொல்றாங்களே, நீங்க முட்டாள் இல்லை என்று இவர்களுக்கு நிரூபிப்பதற்காக ஒரு கேள்வி கேட்கிறேன் நீங்கள் சரியாக பதில் சொல்லவேணும்”, என்று ஒருவர் சொன்னார்.

“அப்பிடியா சொல்லுங்கள். கேள்வி எல்லாம் எனக்கு தண்ணிபட்ட பாடு...” என்றார் இவர்.

“வெறும் வயித்துல உங்களால எத்தனை இடியப்பம் சாப்பிட முடியும்?”- இதுதான் கேள்வி.

அவர் அதற்கு சட்டென பதில் சொன்னார். “பதினைஞ்சு”.

இதை கேட்ட நண்பர், “எப்பிடியடாப்பா முதன் முதல் ஒரு இடியப்பத்தை சாப்பிட்ட உடனேயே உன்ர வயிறு வெறுவயிறாக இருக்காதே. அதெப்படி வெறும் வயித்துல உன்னால பதினைஞ்சு இடியப்பம் சாப்பிட முடியும்?”, என்றார்.

“அட சரியாத்தான் சொல்லியிருக்கிறாங்கள். அது எனக்கு முதல்ல தெரியாமல் போயிற்றே”, என்று கவலைப்பட்டவர், நேரே வீட்டுக்கு வந்ததும் மனைவியிடம் அதேகேள்வியைக் கேட்டார்.

“உன்னால வெறும் வயித்துல எத்தனை இடியப்பம் சாப்பிட முடியும்?”

அதுக்கு அவர் மனைவி சொன்னாள், “பத்து”.

இதை கேட்டதும் அவர், “சே... கொஞ்சம் பிழைச்சுப்போச்சு நீ மட்டும் பதினைஞ்சு எண்டு பதில் சொல்லிருந்தா உன்னை கொஞ்சம் கலாய்ச்சிருப்பன்”, என்றாராம்.

அண்மைக்காலமாக கூட்டமைப்பின் தலைவர்கள் குழம்பிப்போய் இருப்பது குறித்து இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் குறிவைத்திருப்பவர்கள் தங்கள் தகுதியை வெளிச்சம் போட்டுக்காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

மருதங்கேணியில் வீதிப் பணியில் ஈடுபட்டிருந்த நம்மவர் ஒருவரை சீனப் பிரஜை என்று குறிப்பிட்டு சுமந்திரன் தடுமாறியதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது சிவஞானம் சிறிதரன் எம்.பி. தனது ‘திறமையை’ வெளிப்படுத்தியிருக்கிறார். தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சிறிதரன், நெடுந்தீவில் நாற்பது ஏக்கர் காணி சீனாவுக்கு வழங்கப்படவிருப்பதாகவும், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இருக்கும் ஆங்கிலேயர்கால பழைய கச்சேரி கட்டடக் காணியும் சீனாவுக்கு விற்கப்படவிருப்பதாகவும் கூறியதையாவது சகித்துக்கொள்ளலாம், ஆனால், அந்த விடயத்திற்காகவே நாமல் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்றாரெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அட இந்த விடயத்தைச் செய்யவேண்டும் என்றால் அதற்கெலல்லாம் எதற்கு நாமல் யாழ்ப்பாணம் வரவேண்டும் என்று அவரிடம் யாரும் கேள்வி கேட்கவில்லை. சீனத் தூதரகம் என்ன யாழ்ப்பாணத்திலேயா இருக்கின்றது?

இப்படித்தான் யுத்தம் முடிந்த கையோடு, இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு சுரேஷ் பிறேமச்சந்திரன் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். அப்போது அவர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர். முல்லைத்தீவில் இராணுவத்தினரைக் குடியேற்ற ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் அப்போது கூறிய செய்தி தமிழ் மக்களை அச்சத்திற்குள் தள்ளியது.

இப்போது அதேபோல, சிறிதரன் சொல்லியிருக்கிறார். அதற்காக நெடுந்தீவில் நாற்பது ஏக்கர் காணி சீனாவுக்கு விற்கப்படமாட்டாது என்றோ, அல்லது பழைய கச்சேரிக் கட்டடம் விற்கப்படமாட்டாது என்றோ இந்த ஊர்க்குருவி வாதிடப்போவதில்லை. ஆனால், தலைவர்கள் என்றிருப்பவர்கள் ஒரு விடயத்தை சொல்கின்றபோது அதுகுறித்து முழுத் தகவல்களையும் சரியாகப் பெற்றுக்கொண்டு ஆதாரங்களுடன் வெளியிடவேண்டும்.

இதுபோல எழுந்தமானமாக குற்றச்சாட்டுக்களை வெளியிடுகின்றபோது அவை தவறானவை என்று நிரூபணமாகிவிட்டால், பின்னர் அவர்கள் சொல்கின்ற எந்த விடயங்களையும் யாரும் கருத்தில் எடுக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். இது அவர்களுக்கல்ல, அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு பாதிப்பைக் கொண்டுவந்துவிடும்!

- ஊர்க்குருவி

# யாழ். பல்கலைக்கழக கற்கைநெறிகளுக்கு தெரிவு பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைமாணி மற்றும் உடற்கல்வி விஞ்ஞானமாணி ஆகிய கற்கை நெறிகளுக்காக 2020/21 ஆம் கல்வி ஆண்டில் பயில்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான நுண்ணறிவுப் பரீட்சைகளை அடுத்த வாரம் முதல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைமாணி தெரிவுக்கான நுண்ணறிவு பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி - செவ்வாய்க்கிழமையும், உடற்கல்வி விஞ்ஞானமாணி தெரிவுக்கன நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி - வெள்ளிக்கிழமையும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கலைமாணி கற்கை நெறிக்காக விண்ணப்பித்த மாணவர்களில் 1,590 பேர் தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 360 பேர் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியமைக்கான வங்கிச் சிட் டையை அனுப்பவில்லை. அத்துடன் உடற்கல்வி விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 417 பேர் தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 49 பேர் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியமைக்கான வங்கிச் சிட்டையை அனுப்பவில்லை. தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளவர்களின் விபரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும்.

தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்று, விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்கள், தங்களின் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான வங்கிச் சிட்டையை மின்னஞ்சல் மூலமாக அனுமதிகள் கிளைக்கு அனுப்பி வைக்குமாறும், கட்டணம் செலுத்தியமையை உறுதிப்படுத்தத் தவறுபவர்களுக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படமாட்டாது எனவும் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# 672 கிலோ மஞ்சள் படையிடம் சிக்கியது



மன்னார், ஜூலை 09

நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை மஞ்சளை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் பெரியகடை களப்பு பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் 18 மூடைகள் - 672 கிலோ மஞ்சளை இராணுவத்தினர் கைப்பற்றினர்.

இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இந்த மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் 3 வள்ளங்கள், பட்டா ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள் நேற்று காலை 9 மணியளவில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**09.07.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2

**09.07.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
09.07.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# கூட்டமைப்பின் எதிர்காலம்?

இந்த வாரம் சம்பந்தன் பாராளுமன்றம் சென்ற செய்தி ஊடகங்களில் பேசுபொருளாகியிருந்தது. அதாவது, அவர் சக்கர நாற்காலியில் பாராளுமன்றம் சென்றிருக்கின்றார். வயது முதிர்வின்போது சக்கர நாற்காலி தேவைப்படுவது இயல்பான ஒன்றே. ஆனால், சம்பந்தன் சாதாரண ஒரு மனிதர் அல்லர். தமிழ் மக்களை உள்நாட்டிலும், சர்வதேச அரங்குகளிலும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பிரதான அரசியல் கட்சியின் தலைவராக இருப்பவர் சம்பந்தன். அப்படியான ஒருவர் தொடர்பான ஒவ்வொரு விடயமும் உற்று நோக்கப்படும். அந்த வகையில்தான் அவர் சக்கர நாற்காலியில் பாராளுமன்றம் சென்ற விடயம் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது.

இந்த நிலையில்கூட, சம்பந்தன் தனக்குப் பின்னரான கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கவில்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர் ஒருவரின் கருத்துப்படி, தூதரங்களுக்கு சென்றால் கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார் - என்று கேட்கும் நிலைமையே காணப்படுகின்றது. இது இயல்பானதும்கூட. ஆனால், கூட்டமைப்பினர் மத்தியில் எவரிடமும் தெளிவான பதிலில்லை. நடக்கட்டும் பார்ப்போம் என்னும் மனோநிலையிலேயே அவர்கள் இருக்கின்றனர்.

சம்பந்தனுக்கு பின்னர் கூட்டமைப்பு பெரும்பாலும் இருக்காது என்னும் அபிப்பிராயத்தை பரவலாக அவதானிக்க முடிகின்றது. அந்தளவிற்கு தங்களுக்குள் இரண்டாம் மட்ட தலைவர் ஒருவரை காண்பிக்கக்கூடிய நிலையில் கூட்டமைப்பினர் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அண்மைக்காலமாக, கூட்டமைப்பிற்கான இரண்டாம்மட்ட, தலைமை என்னும் முகத்தை காண்பிக்க முயற்சிக்கின்றார். ஆனால், சம்பந்தனின் இடத்தை நிரப்பக்கூடிய நிலையில் கூட்டமைப்பில் எவரும் இல்லை. இதனால், கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் இப்போதாவது சம்பந்தன் கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆனால், அவரின் நடவடிக்கைகளை உற்றுநோக்கினால், அவரிடம் அப்படியான ஆர்வம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மிதவாத அரசியலைப் பொறுத்தவரையில் சக்கரநாற்காலி அரசியல் புதிய ஒன்றல்ல. தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகரான எஸ். ஜே. வி. செல்வநாயகமும் இறுதிக் காலத்தில் சக்கரநாற்காலியில் இருந்த ஒருவர்தான். அந்த வழியில் சம்பந்தனும் சக்கர நாற்காலியில் இருந்தவாறு, தலைவராக இருக்க முயற்சிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், செல்வநாயகம் தனது வாரிசாக அமிர்தலிங்கத்தை காட்டியிருந்தார். அமர்தலிங்கம் திறமையான ஒருவர் என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. அந்த வகையில் செல்வநாயகத்திடம் ஒரு கட்சி சார்ந்த தரிசனம் இருந்தது. தனக்கு பின்னர் விடயங்களை முன்னெடுக்கக்கூடிய ஒருவரை அவர் தனது கட்சிக்குக் காண்பித்தே பிரிந்தார்.

ஆனால், சம்பந்தன் அப்படியான ஒருவரை காண்பிக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகக் குறைந்தது, தனது சொந்த மாவட்டமான திருகோணமலைக்குக்கூட அவரால் ஒரு தலைமைத்துவத்தைக் காண்பிக்க முடியவில்லை. பொதுவாகவே தமிழ் தலைவர்களிடம் ஒரு பண்புண்டு. அதாவது, தாங்கள் செல்வாக்குடன் இருக்கின்ற காலத்தில் தங்களை தாண்டி எவருமே சென்றுவிடக் கூடாது என்றே அனைவரும் எண்ணுவதுண்டு. புதியவர்கள் எவரும் வளர்வதை அவர்கள் விரும்புவதில்லை. இந்த அரசியல் பயமே, இறுதியில் ஆற்றலுள்ளவர்கள் கட்சிக்குள் உருவாகிவிட முடியாத நிலைமையை தோற்றுவிக்கின்றது. இதுதான் இன்று தமிழ் அரசு கட்சிக்கு நடந்திருக்கின்றது. கூட்டமைப்புக்கும் நடந்திருக்கின்றது.

# அநுரகுமார திஸநாயக்கவின் ஆதங்கம் !

**- அலசுவது இராஜதந்திரி -**

*இலங்கை கடந்த காலங்களில் எத்தகைய ஓர் இருண்ட வரலாற்றை கொண்டிருந்த தென்பதை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.*

*இலங்கையில் குறிப்பாக தென்னிலங்கையில் நிலவிய பயங்கரமான சூழ்நிலையை விரிவான முறையில் அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது குறிப்பிட்டிருந்தார்.*

*மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தமும் பின்னர் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ரோஹண விஜயவீர தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் தாக்குதல் நடவடிக்கைகளும் மும்முரமடைந்திருந்த போது வன்முறைகளில் அனைத்துத் தரப்பினரும் மனம்போன போக்கில் ஈடுபட்டிருந்தனர்.*

*இருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு யுத்தம் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்தபோது அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டது போல, ஆட்கடத்தல்கள், காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள், வெள்ளைவானில் கடத்தப்பட்ட சம்பவங்கள் போன்றவை மிக அதிகளவில் இடம்பெற்றிருந்தன.*

**ஜே. வி. பியின் அராஜக நடவடிக்கைகள்**

*ஒருபுறம் வடக்கு - கிழக்கில் சட்டம் - ஒழுங்கு சீரழிந்திருந்த அதேசமயம் தென்னிலங்கையில், அராஜக நடவடிக்கைகளும் கணிசமானளவில் காணப்பட்டிருந்தன. அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டதுபோல வெள்ளை வான் கடத்தல்கள், கொலைகள் என்பவை பரவலான முறையில் இடம்பெற்றதோடு ஊடகவியலாளர்கள் பலரும் தென்னிலங்கையில் கொல்லப்பட்டிருந்தனர். கொலையுண்ட ஊடகவியலாளர்களில் ரிச்சார்ட் டி சொய்ஸா, சிவராம், லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.*

*இதேசமயம் வடக்கு - கிழக்கில் நிமலராஜன், நடேசன் போன்ற பத்திரிகையாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். யாரும் யாருக்கு எதிராகவும் வன்முறைகளில் ஈடுபடலாம் என்ற நிலையே காணப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைநகர் கொழும்பில் தாக்குதல்களை நடத்தியிருந்த நிலையில் தென்னிலங்கையில் இடம்பெற்ற அனைத்து வன்முறைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பாளிகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.*

*ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஓர் அராஜக சூழ்நிலை பற்றி குறிப்பிட்டிருந்தார். ஆனால், ஜே. வி. பி. அமைப்புக்கூட தென்னிலங்கையின் பல பாகங்களில் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

**ரஞ்சன் விஜயரட்ண**

*ஜே. வி. பியின் கொட்டத்தை அடக்குவதில் காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் பாதுகாப்பமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ண ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைகளில் கடும்போக்காளராக விளங்கியிருந்தார்.*



*எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, தென்னிலங்கையில் ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைகள் மிக மூர்க்கமான முறையில் தீவிரமடைந்திருந்தன. கொழும்பை அண்டிய களனி ஆற்றில் சடலங்கள் மிதந்து சென்றன. ஜே. வி. பி. உறுப்பினர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு கடற்கரைகளில் போடப்பட்டிருந்தனர்.*

*எது எப்படியிருந்தபோதிலும் முழுநாட்டிலுமே ஓர் இருண்ட யுகத்தைக்கொண்ட காலகட்டத்துக்கு பொறுப்பாக இருந்தவரே இன்று அரியாசனத்தில் இருக்கும் நாட்டின் தலைவர் என்று ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளமை, தென்னிலங்கையில் அராஜகவாதிகள் எவ்வாறு பலம் பொருந்திய நிலையிலிருக்கின்றனர் என்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.*


*எது எப்படியிருந்தபோதிலும் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு வடக்கு - கிழக்கின் யுத்த நிலவரமே முக்கிய காரணமாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால், தற்போது யுத்தம் முடிவுக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகியுள்ளபோதிலும் வடக்கு - கிழக்கில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதத்தில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பவை எல்லாம் தீர்க்கப்படாதவையாக இருக்கின்றன. அத்துடன்நாட்டின் பொருளாதாரமும் பாதகமான நிலையிலேயே இருக்கின்றது.*

*வடக்கு - கிழக்கின் மனிதாபிமான மற்றும் அரசியல் பிரச்னைகளை தீர்க்கும் விதத்தில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும் தட்டிக்கழிக்கப்பட்டவையாகவே இருக்கின்றன.*

*எனவே, பத்து வருட காலத்துக்கு முன்னர் நிலவிய இருண்ட யுகம் பற்றி ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க சுட்டிக்காட்டியதோடு அந்த யுகத்தின் முக்கிய புள்ளியே இன்று அரியாசனத்தில் இருப்பதாகவும் கூறியிருந்தார். அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்ட இருண்ட யுகத்தின் கடுந்தன்மை குறைவடைந்திருக்கலாம். ஆனால், அந்த யுகத்தின் இருள் முற்று முழுதாக நீங்கிவிடாத நிலையே இன்றும் நிலவுவதை ஆட்சி அதிகாரங்களில் இருப்போரின் நடவடிக்கைகள் மூலமாக அவதானிக்க முடிகின்றது.* •

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
புதிதாக சுபசெலவு உண்டாகும். பயம் நீங்கும். பணி நெருக்கடி குறையும். செயலில் கவனம் தேவை. உடல்நலக்குறைவு வந்தாலும் பாதிப்பு இல்லை.

**இடபம்**
சிலர் அலுவலக விஷயமாக வெளியூர்ப் பயணம் செல்வர். வீடு / மனை விஷயத்தில் இருந்த பிரச்னை மறையும். குடும்பம் பற்றிய திட்டத்தில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்**
மனதில் இருந்த அவசியமற்ற வேதனை மறையும். பிள்ளைகளின் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். பற்றாக்குறை நீங்கும்.

**கடகம்**
விருந்துக்காகச் செலவு செய்வீர்கள். ஜீரண விஷயத்தில் சிரமம் ஏற்படும்.வாகன யோகம் உண்டு. சோம்பலை விட்டொழியுங்கள்.ஆடம்பர பொருட்களை வாங்குவதில் கவனம் தேவை.

**சிம்மம்**
பணியாளர்கள் முன்னேற்றம் காண்பர். பொறுமை பலனளிக்கும்.மனதைக் கட்டுப்படுத்தி நன்மை காண்பீர்கள். நட்பு பலப்படும். வேலையில் கவனம் செலுத்தி தேங்கிய பணியை முடிப்பீர்கள்.

**கன்னி**
கடன் வாங்குவது பற்றி நினைக்கக் கூட வேண்டாம்.வரவு ஓரளவு இருப்பதால் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.அலுவலக சகாக்கள் உங்களுக்கு ஓரளவுதான் உதவுவர்.

**துலாம்**
வியாபாரிகள் கூட்டாளிகளை விட்டுப் பிரிய நேரிடலாம்.கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்கவும். பிரச்னை தீரும். எதிரிகளிடம் உஷாராக நடக்கவும். நன்மைகள் சேரும்.

**விருட்சிகம்**
மற்றவர் பற்றிப் பேசி சிரமத்தில் சிக்க வேண்டாம். அலுவலகத்தில் ஏற்பட்ட பிழையை நீங்களே தீர்ப்பீர்கள். முயற்சியை முடுக்குவீர்கள். பணவரவிற்கு குறைவில்லை.

**தனுசு**
குடும்பத்தவரின் பணிச்சுமையைக் குறைப்பீர்கள். பணியிடத்தில் பேச்சில் கண்டிப்பு காட்ட வேண்டாம். உறவினரை அனுசரித்துப் போவதால் நன்மையடைவீர்கள்.

**மகரம்**
சண்டை சச்சரவில் ஈடுபடாமல் ஒதுங்கினால் நன்மை. பணியிடத்தில் அதிக வேலை செய்ய வேண்டியிருக்கும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. அறிவாற்றல் அதிகரிக்கும்.

**கும்பம்**
சகோதரர்வழியில் நன்மையை எதிர்பார்க்கலாம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப மகிழ்ச்சி கூடும். முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் விலகும்.

**மீனம்**
நன்மை செய்து பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். பெற்றோர்வழியில் நன்மை தேடி வரும். உடல் நலம் பெறும். எடுத்த விஷயத்தில் வெற்றி காணலாம். செலவு கணிசமாக குறையும்.

# பா.ஜ.க - அ.தி.மு.க. கூட்டணி தொடரும் பிரதமர் மோடியின் மீது நம்பிக்கை

## சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் ஓ.பி.எஸ்.

சென்னை, ஜூலை 09

தமிழக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தின் கருத்து அரசியல் வட்டாரத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி தொடரும் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.கவின் தோல்விக்கு பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தது தான் காரணம் என்று முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்தது பா.ஜ.க - அ.தி.மு.க. கூட்டணியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. மாநில பொதுச் செயலாளர் கே.டி. ராகவன், “பா.ஜ.கவைப் பொருத்தவரை நாடு முழுவதும் 303 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. 2014 ஆம் ஆண்டை விட தற்போது அதிகமான இடங்களில் வெற்றி பெற்று இருக்கிறோம். உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் 18 சதவிகித இஸ்லாமியர் வாக்காளர்கள் உள்ளனர். அந்த இடத்திலேயே 67 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றிருக்கிறோம்.

அ.தி.மு.க. ஆட்சியின் சில முடிவுகள் இந்த தோல்விக்குக் காரணம் என்று கூட எங்களது நிர்வாகிகள் கருதுகின்றனர். ஆனால், பொதுவெளியில் கூட்டணி தர்மத்தை மீறி சி.வி. சண்முகம் பேசியிருக்கிறார். இது கண்டிக்கத்தக்கது. இவருடைய தோல்விக்கு பா.ஜ.கவைக் குற்றம்சாட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று குறிப்பிட்டார்.

அதுபோன்று சி.வி.சண்முகத்தின் கருத்துக்கு இ.பி.எஸ். ஓ.பி.எஸ். ஆகியோர் பதில் கூற வேண்டும் என்று பா.ஜ.கவினர் தெரிவித்து வந்தனர். இந்நிலையில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பா.ஜ.க. மீதும் பிரதமர் மோடி மீதும் அ.தி.மு.க. முழு நம்பிக்கை வைத்துள்ளது. தேச நலன் கருதியும் தமிழ்நாட்டின் நலன் கருதியும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி தொடரும். இதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை” என்று தெரிவித்துள்ளார்.

# மத்திய அமைச்சரானார் எல்.முருகன் தொலைபேசியில் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூலை 09

மத்திய இணை மந்திரியாகப் பதவியேற்ற தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகனுக்கு தொலைபேசியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய மந்திரிசபை விரிவாக்கம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் 43 பேர் இடம்பெற்றனர். புதிய மத்திய மந்திரிகளுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பதவி பிரமாணம் செய்துவைத்துள்ளார்.

மத்திய மந்திரிசபையில், புதிதாக 15 மந்திரிகள், 28 இணை மந்திரிகள் பதவியேற்று கொண்டனர். அவர்களில் இணை மந்திரியாக பொறுப்பேற்ற தமிழக பா.ஜ.க. தலைவர் எல். முருகனும் ஒருவர். அவருக்கு தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை, மீன்வளம், கால்நடைத்துறை மற்றும் பால்வளத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு தமிழக அரசியல் கட்சிதலைவர்கள்பலரும்வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் முதல்-அமைச்சர் மற்றும் தி.மு.க. தலைவரான மு.க. ஸ்டாலின் தொலைபேசி வழியே எல். முருகனை தொடர்பு கொண்டு தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# ஜேர்மனி கொலோன் பல்கலைக்கழக தமிழ் துறைக்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு

## முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டார்

சென்னை, ஜூலை 09

ஜேர்மனியில் அமைந்துள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறை தொய்வின்றி இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி வழங்க தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



தமிழ் மொழியின் வளர்ச்சியில், ஜேர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்ப் பிரிவும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியில் ஆய்வு நிறுவனம் 1963 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கடந்த 2014 ஆம் ஆண்டு கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்கு உருவான நிதிப் பற்றாக்குறையால், அங்கு பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ் செப்ரெம்பர் 2020-இல் ஓய்வு பெற்றபின், தமிழ்ப் பிரிவை மூடுவதாக அப்பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்தது.

அந்த சமயத்தில், அமெரிக்க வாழ் இந்தியர்கள் தமிழ்த் துறை தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான நிதியில் பாதியைத் திரட்டி கொலோன் பல்கலைக் கழகத்திற்கு அளித்ததால், தமிழ்ப் பிரிவை மூடும் முடிவு ஜூன் 2022 வரை ஒத்திவைக்கப்பட்டது. கொலோன் பல்கலைக் கழக தமிழ்த் துறைக்கு தேவையான நிதியில் 1 கோடியே 25 லட்சம் ரூபாயை, 2019 இல் முந்தைய ஆட்சியாளர்கள் தமிழக அரசின் சார்பில் அளிப்பதாக அறிவித்திருந்தனர். அதனை உடனடியாக அளித்து அப்பல்கலைக்கழகத்திற்கு உதவ வேண்டுமென, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

எனினும், தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட அத்தொகை விடுவிக்கப்படாததை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கொலோன் பல்கலைக்கழக தமிழ்த் துறை தொடர்ந்து, தொய்வின்றி, இயங்கிட ஏதுவாக, தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாயை உடனடியாக கொலோன் பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு வழங்கிட உத்தர விட்டார்.



# ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றல் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

*கிளிநொச்சி, ஜூலை 09*

ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சாந்தபுரம் இராணுவ வைத்தியசாலை, பூநகரி உள்ளிட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில், நேற்று முதல் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஓட்டமாவடி மையவாடியில் 934 சடலங்கள் அடக்கம்!

*மட்டக்களப்பு, ஜூலை 09*

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவின் 'மஜ்மா நகரில்' அமைந்துள்ள கொரோனா மையவாடியில் இதுவரையில் 934 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 883 முஸ்லிம்களின் சடலங்களும் 22 இந்துக்களின் சடலங்களும் 14 கிறிஸ்தவர்களின் சடலங்களும் 13 பௌத்தர்களின் சடலங்களும் 02 வெளிநாட்டவர்களின் சடலங்களும் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டவர்களில் ஒருவர் இந்தியர் எனவும் மற்றையவர் நைஜீரியாவை சேர்ந்தர் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கு இலங்கையில் முன்னதாக தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஊடக சுதந்திரத்தை ஒழிக்க அரசாங்கம் தீவிர முயற்சி!

## எதிர்க்கட்சியினர் போராட்டம்

**கொழும்பு, ஜூலை 09**

**இலங்கை அரசாங்கம் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்ய முயற்சிப்பதாகவும், மக்களை தொடர்ந்தும் நெருக்கடிக்குள் உள்ளாக்கும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

பத்திரமுல்லை, பாராளுமன்ற வாயிலுக்கு முன்பாக சுகாதார வழிமுறைகளுக்கு இணங்க இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு, பதாதைகளை ஏந்தியவாறு அரசாங்கத்திற்கான எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது, விவசாயிகள், மீனவர்கள், பெருந் தோட்டத் தொழிலாளர்கள், பொது மக்கள் என நாட்டின் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என இவர்களால் வலியுறுத்தப்பட்டது.

# 20,567 ஆசிரியர்களுக்கு வடக்கில் தடுப்பூசிகள்

*யாழ்ப்பாணம், ஜூலை 09*

ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை பணியாளர்களுக்கான தடுப்பூசித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் மொத்தம் 20,567 பேர் கோவிட் 19 தடுப்பூசிகளைப் பெறவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 10,354 பேர் இத்திட்டத்தின் கீழ் தடுப்பூசி பெற தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சியில் - 2,329, வவுனியாவில் - 3,205, மன்னாரில் - 2,422 மற்றும் முல்லைத்தீவில் 2,257 பேரும் தடுப்பூசி பெறவுள்ளனர்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான முயற்சியாக அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை பணியாளர்களுக்கும் தடுப்பூசி போட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் வயது வித்தியாசம் இன்றி அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை பணியாளர்களுக்கும் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

ஜூலை மாதம் முதல் 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மீண்டும் திறக்க கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது. நாடு முழுவதும் 100 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட சுமார் 3,000 பாடசாலைகள் உள்ள நிலையில் முதல் கட்டமாக அவற்றைத் திறக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே பாடசாலைகளைத் திறக்க முன்னர் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி போடும் திட்டம் 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அளம்பில் வடக்கு கடற்கரையில் கரையொதுங்கியது புள்ளி சுறா!

*முல்லைத்தீவு, ஜூலை 09*

முல்லைத்தீவு - அளம்பில் வடக்கு கடற்கரையில் புள்ளி சுறா ஒன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி முல்லைத்தீவு ,கொக்கிளாய் கிழக்கு கடற்கரையில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் கரைவலையில் சிக்கி புள்ளி சுறாவொன்று கரைக்கு வந்த நிலையில், மீனவர்கள் மீண்டும் அதனை கடலுக்குள் அனுப்பி வைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு வடக்கு கடற்பரப்பில் மற்றுமொரு புள்ளி சுறா ஒன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு கடற்பரப்பில் எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் மூழ்கிய பின்னர் இலங்கை கடற்கரைகளில் தொடர்ச்சியாக கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செல்வபுரம் வன்முறை சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேர் யாழில் கைது!

*யாழ்ப்பாணம், ஜூலை 09*

முல்லைத்தீவு செல்வபுரத்தில் வீடொன்றுக்குள் புகுந்து ஒருவருக்கு வாளால் வெட்டியும், காரை எரியூட்டியும் அட்டூழியத்தில் ஈடுபட்ட 6 பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுவிஸில் இருந்து ஆவா குழுவைச் சேர்ந்த ஒருவர் பணம் அனுப்பி இந்த தாக்குதலை நடத்தியுள்ளார் என சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலியைச் சேர்ந்த மூவரும் புத்தூரைச் சேர்ந்த மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி கள்ளப்பாட்டுப்பகுதியில் வீடு ஒன்றுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன் வாகனங்களுக்கு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றிருந்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் நவாலியில் வைத்து கைது செய்யப்பட்ட ஒருவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து மூன்று மோட்டார் சைக்கிள் கள், வாள்கள் என்பன கைப்பற் றப்பட்டன.

# வில்பத்து பூங்காவில் நேற்று 8 வேட்டைக்காரர்கள் கைது!

*கொழும்பு, ஜூலை 09*

வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக வில்பத்து தேசிய பூங்காவுக்குள் அத்துமீறி நுழைந்ததற்காக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி உட்பட எட்டுப் பேரை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வில்பத்து தேசிய பூங்காவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இலந்தகஹவெவ பகுதியில் எட்டு வேட்டைக்காரர்களை கைது செய்தனர். சந்தேகநபர்களிடமிருந்து வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.



# பஸிலுக்காக வெடி!

வவுனியா, ஜூலை 09
பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பதவியேற்றதை யடுத்து பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களால் வவு னியா பழைய பஸ் நிலையத்தில் நேற்றி வெடிகொழுத்தி, இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

பொதுஜன பெரமுன கட் சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பஸில் ராஜபக்ஷ புதிய நிதியமைச்சராகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து, பொதுஜன பெரமுன கட்சியின் வவுனியா மாவட்ட ஆதரவாளர்கள் வெடி கொழுத்தி மகிழ்ந்த துடன், அங்கு நின்றவர்கள், வீதியால் சென்றவர்களுக்கு இனிப்புக்களும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் வவுனியா நகரசபையின் உப தவிசாளர் சு.குமாரசாமி, பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் ஆதரவாளர்கள், பொதுஜன ரெமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முகமாலையில் புதன் இரவு வாள்வெட்டு குழு அடாவடி

## குடும்பத் தலைவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 09
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியள வில் வீட்டுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் தொலைக் காட்சி பார்த்துக்கொண்டு இருந்த குடும்பத்தலைவரை வாளால் வெட்டியுள்ளது.

இதனால் கை, கால் மற்றும் முதுகுப் பகுதியில் அவர் காயம டைந்தார்.

பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக கிளி நொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதேபோல் வீட்டில் வாய் பேச முடியாத நிலையில் இருந்த நபரையும் அந்தக் குழு தாக்கியுள்ளது.

வீட்டில் இருந்த தொலைக் காட்சி, அலுமாரி உள்ளிட்ட பொருட்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விரைந்து செயல்பட்ட முகமாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை அவதா னித்தனர்.

# இராணுவ மயமாக்கல் நோக்கி பயணிக்கின்றதா இலங்கை?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி



**கொழும்பு, ஜூலை 09**
**கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் சில செயல்பாடுகள் நாடு இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிக் கின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயல்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான மருத்துவநிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரி வித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக் கையில்-

கொரோனா வைரஸ் பரவ லுக்கு மத்தியில் முன்னெ டுக்கப்படும் சில செயல் பாடுகளின் விளைவாக, நாடு இராணுவமயமாக்கலை நோக் கிப் பயணிக்கின்றதா என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக தடுப்பூசி வழங் கல் செயல்திட்டம் ஸ்தம் பிதமடைந்திருந்த நிலையில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் தடுப் பூசி வழங்கல் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றின் ஊடாகவும் பொதுமக்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனூடாக நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 79 ஆயிரத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் மேல் மாகா ணத்தில் வழங்கப்பட்டிருந்தன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த செயற்திட் டத்தை மிகவும் வினைத்திற னான வகையில் நடைமுறைப் படுத்தி வந்தது.

ஆனால், தற்போது பல வைத்தியசாலைகளில் இந்தத் தடுப்பூசி வழங்கல் செயல் திட்டம் தடைப்பட்டிருக் கின்றது. வழங்கப்படும் தடுப் பூசிகளின் எண்ணிக்கை கணி சமான அளவால் குறைக்கப்பட் டுள்ளது. இந்தத் தடுப்பூசிகள் இராணுவ வைத்தியசாலை களுக்கும் இராணுவ முகாம் களுக்கும் அனுப்பப்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைத் துள்ளன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், சுகா தாரத்துறையின் வழிகாட்ட லின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் அனைத்தும் இராணுவத்தி னரிடம் ஒப்படைக்கப்பட்டு, முழுமையாக இராணுவமயப் படுத்தப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தடுப்பூசி வழங்கல் செயல் பாடானது தொற்று நோய்த் தடுப்புப்பிரிவினால் உரிய விதத்தில் முன்னெடுக்கப்ப டாமை குறித்து நாம் தொடர்ச் சியாக சுட்டிக்காட்டிவந்தோம்.

அதுமாத்திரமன்றி தடுப்பூசி வழஙகல் விவகாரத்தில் பின்பற் றப்படக்கூடிய சரியான செயல் திட்டத்தையும் நாம் முன்வைத்தோம். அவ்வாறிருக் கையில் தற்போது எமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின் படி சுகாதார அமைச்சின் செய லாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்கவின் பணிப்பின் பேரில் தொற்று நோய்த்தடுப் புப் பிரிவானது தடுப்பூசிகளை எமக்கு வழங்காமல் இராணுவ வைத்தியசாலைகளுக்கும் முகாம்களுக்கும் விநியோகித்து வருவதாக அறியமுடிகின்றது.

சுகாதாரத்துறையின் செயல் பாடுகளைப் பாதிப்படையச் செய்து, பொதுமக்களையும் அசௌகரியத்திற்குள்ளாக்கி, இந்தத் தடுப்பூசி வழங்கல் பொறிமுறையைக் குழப்புவதன் நோக்கம் என்ன? நாடளாவிய ரீதியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை வழங்கக்கூடிய இயலுமையை சுகாதாரத்துறை கொண்டிருக் கின்றது.

அவ்வாறிருக்கையில், தடுப்பூசிகளை இராணுவத் தினரிடம் வழங்குவதானது நாட்டில் எவ்வாறான ஆட்சி ஏற்படப்போகின்றது என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது- என்றார்.

(அ)

# ஹற்றனில் போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி. செயல்பாட்டாளர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 09
சேர் ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல் கலைக்கழகச் சட்டமூலத்தை உடன் மீள பெறுமாறு வலியு றுத்தி ஹற்றன் மணிக்கூட்டு கோபுரச்சந்திக்கு முன்பாக ஜே. வி.பியினர் நேற்று போராட் டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அக்கட்சியின் அரசியல் செயல்பாட்டாளர்கள் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொரோனா வைரஸ் பர வலைக்கட்டுப்படுத்தும் நோக் கில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்த பொலிஸார், இவ்விடயத்தை சுட்டிக்காட்டி அதனை நிறுத்துமாறு வலியுறுத்தினர்.




எனினும், போராட் டக்காரர்களால் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டது. இதனால் பொலி ஸாருக்கும், அரசியல் செயல் பாட்டாளர்க ளுக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

# பயங்கரவாத அச்சுறுத்தல் இலங்கையில் கிடையாது

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 09
உளவுத்துறை அறிக்கைக ளின் அடிப்படையில் இலங் கையில் பயங்கரவாத அச்சுறுத் தல் எதுவும் இல்லை என பாது காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக் கைகள் அல்லது இதுபோன்ற அச்சுறுத்தல்கள் குறித்து புலனாய்வு அமைப்புக்களில் இருந்து எந்வோர் அறிக்கை யும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட புதிய பயண அறிவுறுத்தலில் இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

சுற்றுலாத் தலங்கள், போக் குவரத்து மையங்கள், சந்தை கள், வணிக வளாகங்கள், அரச நிறுவனங்கள் , ஹோட்டல்கள், கிளப்புகள், உணவகங்கள், வழி பாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளை குறிவைத்து இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை கூறியது.

அத்துடன், கோவிட் பரவல் அதிகரித்திருப்பதன் காரண மாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்யவேண் டும் எனவும் அதில் தெரிவிக் கப்பட்டது. இந்நிலையிலேயே அமெரிக்காவின் இந்த எச்சரிக் கைப் பதிலளிக்கும் வகையில் இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் எதுவும் இல்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்ராலின் உட்பட 31 பேர் கைது!

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்

**கொழும்பு, ஜூலை 09**

**கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான புதிய சட்டதிருத்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உயர் கல்வித் துறை இராணுவ மயமாக்கப்படுவதைக் கண்டித்தும் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின்பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட 31 பேர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.**

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்ட திருத்த யோசனை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்படுதாக அறிவிக்கப் பட்டிருந்தது.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பில் பொதுவாகப் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு முரணாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், அது இலவசக் கல்வியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் மாணவர்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்தினர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம் தொடர்பான புதிய சட்டமூலத்தை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தின்பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட பலர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டனர். (அ)

# கிழக்கில் யாருக்குமே டெல்டா வைரஸ் இல்லை!

மட்டக்களப்பு, ஜூலை 09

கிழக்கு மாகாணத்தில் டெல்டா வைரஸ் எவருக்கும் பரவவில்லை என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

எனினும், கோவிட் - 19 வைரஸ்களைத் தடுப்பதற்கான நடைமுறைகளை மக்கள் பேண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

கிண்ணியா தள வைத்திய சாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நிலையில் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்படுவது குறைவாகவுள்ளது. எனவே மக்கள் கவனவீனமாக இருக்காமல் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி, முன்னெடுக்கப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் இதனை பெறவேண்டும்.

இதுவரைக்கும் தடுப்பு மருந்துகளை பெற்றவர்களில் எவருக்கும் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. எனவே, பயமில்லாமல் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும்.

எதிர்வரும் காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் முன்னிலை உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன-என்றார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 5,842 பேருக்கு தடுப்பூசி

கிளிநொச்சி, ஜூலை 09

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று வரை, 5,842 பேருக்கு, கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

சுகாதாரப் பணியாளர்கள், ஆடைத்தொழிற்சாலை பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதில் உள்ளடங்குவதாகத் தெரிவித்த அவர், இவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் என 5,011 பேருக்கும் சுகாதாரப் பணியாளர்கள் 831 பேருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# தனிமைப்படுத்தலை மீறிய 298 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 09

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 298 பேர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 63 பேர் கண்டியைச் சேர்ந்தவர்கள்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுகளில் இதுவரை மொத்தம் 48,542 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

41,000 பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளவர்களுக்கு எதிராக வரும் நாட்களில் வழக்குகள் பதிவு செய்யப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஒரு நபர் தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறுவதாகக் கண்டறியப் பட்டால் நீதிமன்றத்தால் ரூ.10,000 அபராதம் அல்லது ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனை விதிக் கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.



# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் மரணம்!

வவுமியாறு ஜூலை 09

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பொருட்களை ஏற்றிச்சென்ற லொறி புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி ஒருவர் மரணமடைந்ததுடன், வாகனத்தின் சாரதி படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சம்பவத்தில் மஸ்கெலியா பகுதியை சேர்ந்த பிரவீன் (வயது 21) என்ற இளைஞரே இறந்தார். விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பசறை சுகாதார அதிகாரி பிரிவில் மேலும் 30 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 09

பசறை சுகாதார பிரிவில் கொரோனா தொற்றாளர்கள் 30 பேர் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், பெருந்தோட்டமொன்றின் இரு வரிசை லயன் குடியிருப்புத் தொகுதிகளை முடக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும், பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். ஜெயகுமார் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை நேற்று காலை வெளியான போதே, மேற்படி கோவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் நேற்று பிந்துனுவெவ கோவிட் 19 சிகிச்சை நிலையத்துக்கு அம்புலன்ஸ்மூலம் அனுப்பப்பட்டனர்.

அடையாளம் காணப்பட்ட மேற்படி 30 பேரில், 11 பேர் பசறைப் பகுதியின் பிலானிவத்தை பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் வசித்து வந்த மேற்படி தோட்டப் பிரிவின் இரு லயன் குடியிருப்புக்களில் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணிய 60 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# கேப்பாபிலவு மக்கள் குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமம்

## உடனடி தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 09

முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் வசிக்கும் 65வரையான குடும்பங்கள் தற்போதைய வறட்சியான கால நிலை காரணமாக குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் தற்போது 150க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் 65 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன.

அந்த கிராமத்தில் பத்துக்கும் மேற்பட்ட பொதுக் கிணறுகள், குழாய்க்கிணறுகள் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டன.

இதில் கூடுதலான கிணறுகள் நீரின்றி காணப்படுகின்றன. அதேவேளை, குழாய்க்கிணறுகளும் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இதனால் தாங்கள் குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைக்கான நீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த குழாய்க்கிணறுகளை புனரமைத்து குடிதண்ணீர்க் கிணறுகளை துப்பரவு செய்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் குடிதண்ணீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரும் மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# தெல்லிப்பழை இளைஞன் ஸ்காபரோ விபத்தில் பலி!

கொழும்பு, ஜூலை 09

கனடாவில் நடந்த விபத்தில் தெல்லிப்பழையை சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கனடா, ஸ்கார்பாரோ, கிங்ஸ்டன் மற்றும் போர்ட் யூனியன் வீதிக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 23 வயதுடைய அஸ்வின் சந்திரராஜ் என்ற தெல்லிப்பழையை பூர்வீகமாகக் கொண்ட இளைஞன் ஒருவரே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மோட்டார் வாகனம் ஒன்றும் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இதில் மோட்டார் வாகனத்தை ஓட்டி சென்ற தமிழ் இளைஞனே உயிரிழந்தார்.

பஸ் சாரதியான 61 வயதுடைய நபர் படுகாயமடைந்துள்ளார். விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் ஒருவரும் பயணிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

## ஆப்கானிஸ்தானில் நடப்பது என்ன?

# வெளியேறும் அமெரிக்கா; முன்னேறும் தலிபான்கள்!

**“ எந்தக் காரணத்தைச் சொல்லி ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா படையெடுத்ததோ, இன்று அதே காரணம் மீண்டும் வலுப்பெற அடித்தளம் அமைத்துக் கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது அமெரிக்கா. ஒருவேளை, தலிபன்களின் கைகளில் ஆப்கான் முழுவதுமாக விழுந்துவிட்டால், தெற்காசிய அரசியலின் தட்பவெப்பம் முற்றிலும் மாறிவிடும்!**

தாக்ஷாயினி

தீவிரவாதத்துக்கு எதிரான போர்’ எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, கடந்த 20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் நடத்திவந்த போர், தன் கடைசி அத்தியாயத்தில் இருக்கிறது. இதை வெளிப்படுத்தும்விதமாக, ஜூலை 2ஆம் திகதி அதிகாலையில் ஆப்கனின் பக்ராம் விமானப்படைத் தளத்திலிருந்து, அமெரிக்காவின் கடைசி இராணுவ விமானம் வெளியேறியிருக்கிறது.

இனி, ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை அந்த நாட்டின் தலைவர்களும் இராணுவமும்தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற முற்றுப்புள்ளி விழுந்திருப்பதால், ஆப்கானைக் கபளீகரம் செய்யத் துடிக்கும் தலிபன்கள் கொண்டாட்டத்தின் உச்சத்திலிருக்கிறார்கள். அமெரிக்காவின் இந்த வெளியேற்றத்தால், தெற்காசிய அரசியல்தகிக்க ஆரம்பித்திருக்கிறது!

### முடிவுறாத 20 வருட போர்!

செப்ரெம்பர் 11, 2001 இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் தீவிரவாதத் தாக்குதலுக்குள்ளாகி தரைமட்டமாக்கப்பட்டன. சுமார் 3,000 பேரைப் பலிவாங்கிய இந்தக் கோரத் தாக்குதல், உலகத்தின் போக்கையே மாற்றியமைத்தது. தாக்குதலை நடத்திய அல்கொய்தா தீவிரவாத இயக்கமும், அவர்களோடு தொடர்பிலிருந்தவர்களும் உலகம் முழுவதும் வேட்டையாடப்பட்டனர். அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் பின்லேடன், அய்மன் அல் ஜவாஹிரிக்கு அடைக்கலம் அளிப்பதாக, ஆப்கானை அப்போது ஆட்சிசெய்த தாலிபன்கள் மீது குற்றம்சாட்டப்பட்டது. பின்லேடனைப் பிடிப்பதற்கும் அல்கொய்தாவை ஒழிப்பதற்கும் ‘தீவிரவாதத்துக்கு எதிரான போர்’ என்ற பெயரில் ஆப்கானிஸ்தானில் போரைத் தொடங்கியது அமெரிக்கா.

பாமியன் குன்றுகளிலிருந்த புத்தர் சிலைகளை வெடிவைத்து தகர்ப்பது, பெண்களைக் கொத்தடிமைகள்போல நடத்துவது, ‘இஸ்லாமிக் எமிரேட் ஆஃப் ஆப்கானிஸ்தான்’ என்ற பெயரில் தாங்கள் நடத்தும் ஆட்சியை எதிர்த்து பேசுபவர்களைச் சுட்டுக்கொல்வது எனத் தலிபான்கள் கொட்டமடித்த நேரமது என்பதால், நேட்டோ கூட்டமைப்பு உட்பட பல உலக நாடுகளும் அமெரிக்காவின் போரில் கைகோத்தன.

ஆண்டுகள் செல்லச் செல்லத்தான், புதைகுழியில் வந்து சிக்கிக்கொண்டதை அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உணர்ந்தன. ஆப்கானின் அரசியல் வித்தியாசமானது. அந்த நாட்டின் ராணுவத்தையும் தாண்டி, நாட்டிலுள்ள ஒவ்வோர் இனக்குழுவுக்கும் பிரத்யேகப் போர் வீரர்களும், இராணுவத் தலைவர்களும் இருப்பார்கள். இவர்களில் யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்பதை அமெரிக்கா புரிந்துகொள்வதற்குள் இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. நட்பாக உள்ள இனக்குழுத் தலைவர்களை ஒருங்கிணைத்து, ஆப்கானிஸ்தானின் அரசியலுக்குள் அவர்களை ஐக்கியப்படுத்தும் வேலையை அமெரிக்கா முயன்றும், அது சரியாகப் பலனளிக்கவில்லை. தலிபன்களின் தாக்குதல் ஒருபக்கம் இருந்தாலும், இனக்குழுக்களுக்கு இடையேயான ஈகோ சண்டையால் அமெரிக்கப் படைகள் திண்டாடின. நிலையான அமைதியை அமெரிக்காவால் ஆப்கானில் ஒரு போதும் நிலைநாட்டவே முடியவில்லை.

அமெரிக்காவின் பிரௌன் பல்கலைக் கழகம் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டிருக்கும் ஆய்வுகளின்படி, கடந்த 20 வருடங்களில் ஆப்கானிஸ்தானில் மட்டும் சுமார் 1,74,000 பேர் போரால் உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களில் சுமார் 2,300 அமெரிக்க இராணுவ வீரர்களும் அடக்கம். ஆப்கான் போருக்காக மட்டும் சுமார் 2 இலட்சம் கோடி அமெரிக்க டொலரை அமெரிக்கா அழித்திருக்கிறது.



இவ்வளவு பணம் செலவாகியும், உயிரிழப்புகள் ஏற்பட்டும், போரில் அமெரிக்கா வெற்றிபெறவில்லை என்பதே நிதர்சனம். ஜூன் 30 ஆம் திகதி நிலவரப்படி, ஆப்கானிஸ்தானிலுள்ள 407 மாவட்டங்களில் 142 மாவட்டங்களை தலிபன்கள் கட்டுப்படுத்திவைத்திருக்கின்றனர். “வரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுவதுமாக வெளியேறிவிடும்” என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஏப்ரலில் அறிவித்த பிறகு, 69 மாவட்டங்களை அசுர வேகத்தில் தாலிபன்கள் பிடித்துள்ளனர். இந்த வேகம்தான் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருக்கிறது.

### அபின் சாம்ராஜ்ஜியம்!

உலகின் மொத்த அபின் உற்பத்தியில் 80% ஆப்கனிலிருந்து செல்வதால், அதில் கிடைக்கும் வருவாயை உள்நாட்டுப் போருக்குப் பயன்படுத்திக்கொள்கிறது தாலிபன். பாகிஸ்தான், ஈரான் வழியாக மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இந்த அபின் கடத்தல் சாம்ராஜ்ஜியம் ‘தங்கப்பிறை’ என்றழைக்கப்படுகிறது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ், ஈரான் இராணுவ அதிகாரிகள் எனப் பலருக்கும் இந்தக் கடத்தல் இலாபத்தில் பங்கு செல்வதால், இந்தப் பிறை யைக் கடைசிவரை அமெரிக்காவால் உடைக்க முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த அபின் சாம்ராஜ்யம் மேலும் விரிவடையும் என்கிறது ஐ.நா-வின் பாதுகாப்பு கவுன்சில் அறிக்கை. ஐ.நா-வுக்கான போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தடுப்பு அலுவலகத்தின் இயக்குநர் காடா வாலி, “2020 ஆம் ஆண்டு மட்டும் ஆப்கானிஸ்தானில் 37% அபின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. ஆப்கானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அபினின் வர்த்தகம் மட்டும் 11% அளவுக்கு உயர்ந்திருப்பதை எச்சரிக்கையாக நாம் பார்க்க வேண்டும்” என்றிருக்கிறார்.

சமீபத்தில் தன்னை வாஷிங்டனில் சந்தித்த ஆப்கானிஸ்தான் அதிபர் முகமது அஸ்ரப் கானியிடம், ஆப்கானின் பாதுகாப்புக்குத் தன்னாலான எல்லா ஒத்துழைப்புகளையும் தருவதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வாக்குறுதி அளித்திருக்கிறார். ‘இனி ஆப்கானின் பாதுகாப்பை அந்த நாடே பார்த்துக்கொள்ள வேண்டும்’ என்பது தான் இதில் மறைந்திருக்கும் பொருள். பைடனின் இந்த முடிவுக்கு சி.ஐ.ஏ. முன்னாள் இயக்குநர் டேவிட் பெட்ரேயஸ், ஆப்கனுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் ரியான் க்ரோச்சர் எதிர்ப்பு தெரிவித் திருக்கிறார்கள். “போரை நாம் முடிவுக்குக் கொண்டு வரவில்லை. களத்தை நம் எதிரிகளிடம் விட்டுக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறோம்” என்று க்ரோச்சர் கொதித்திருக்கிறார். அமெரிக்கப் படைகள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கிற, ஆப்கானிலிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ஸ்காட் மில்லர் செய்தியாளர்களிடம் பேசும் போது, “தலிபான்கள் முன்னேறும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஆறு மாதங்களில் ஆப்கான் தலைநகர் அவர்கள் வசம் சென்றுவிடும்” என்றார். இராணுவத் தலைமைகளின் எச்சரிக்கையையும் மீறி அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இப்படியொரு முடிவை எடுத்ததற்கு, தேர்தல் வாக்குறுதியும், போரால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலும்தான் காரணம் என்கிறார்கள்.

### உற்சாகத்தில் பாகிஸ்தான்

இந்தக் களேபரங்களில் குஷியாகியிருப்பது பாகிஸ்தான்தான். ஆப்கானிஸ்தானின் பொருளாதாரக் கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பல நூறு கோடி ரூபாயை இந்தியா அளித்திருக்கிறது. ஆப்கானின் பாராளுமன்றக் கட்டடம், சல்மா அணைக்கட்டு ஆகியவற்றை இந்தியா இலவசமாகக் கட்டிக்கொடுத்திருக்கிறது. ஆப்கானிஸ்தானை நட்பின் அடிப்படையில் தன் வசமாக்கிக்கொண்டால், இராணுவரீதியாக ஒருபக்கம் சீனாவையும், மறுபக்கம் பாகிஸ்தானையும் எளிதாகச் சமாளிக்க முடியும் என்பது இந்தியாவின் கணக்கு. தவிர, துருக்மெனிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு எரிவாயு எடுத்துவர ‘டபி பைப் லைன்திட்டம்’ 2015 இல்தொடங்கப்பட்டது.

பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் பைப்லைன் பதிக்கும் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. இந்தச் சூழலில், தலிபன்களின் அதிகாரம் ஆப்கானில் ஓங்குவது இந்தியாவுக்குப் பிரச்னைதான். தலிபன்களுடன் சமாதானப் பேச்சு நடத்த இந்தியத் தரப் பில் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், பாகிஸ்தானின் அழுத்தம் காரணமாக இந்திய சமாதான அழைப்பை தலிபான்கள் ஏற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

ஜூன் 24ஆம் திகதி, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம்வகிக்கும் நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, ஆப்கானிஸ்தானிலுள்ள இந்தியச் சொத்துகளுக்கும் இந்தியர்களுக்கும், பாகிஸ்தான் தொடர்ந்து அச்சுறுத்தல் தருவதை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் எடுத்துக் கூறியிருக்கிறார். டோசா நாட்டில் நாடு கடந்த அரசாங்கம் அமைத்திருக்கும் தாலிபன்களுடன் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் தொடர்ச்சியாக மறைமுகப் பேச்சு நடத்துவதும் இந்தக் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது.

‘தலிபான்களுடன் கரம் கோத்துக் கொண்டு ஆப்கன் அரசியலை பாகிஸ்தான் தன் சுண்டுவிரல் அசைவில் வைத்துக்கொள்ளும். இது மொத்த தெற்காசியாவுக்கும் ஆபத்து’ என்றிருக்கிறது இந்தியத் தரப்பு. ஒருவேளை தலிபான்கள் ஆப்கானைப் பிடித்துவிட்டால், அதன் தாக்கம் ஜம்மு காஷ்மீரையும் தாண்டி டில்லி வரை பாயும் என்பது இந்தியாவின் கவலை. ஆப்கானிலிருக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்கும்படி எச்சரிக்கையும் வெளியிட்டிருக்கிறது இந்திய வெளியுறவுத்துறை.

எந்தக் காரணத்தைச் சொல்லி ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா படையெடுத்ததோ, இன்று அதே காரணம் மீண்டும் வலுப்பெற அடித்தளம் அமைத்துக் கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது அமெரிக்கா. ஒருவேளை, தலிபான்களின் கைகளில் ஆப்கான் முழுவதுமாக விழுந்துவிட்டால், தெற்காசிய அரசியலின் தட்பவெப்பம் முற்றிலும் மாறிவிடும்! ■




**இன்று வெள்ளிக்கிழமை 26 ஆவது ஆண்டு துயரமிக்க நினைவு நாள்**

செ.ரமேஷ்

# மறக்க முடியாத நவாலி படுகொலை

வடக்கு -கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற தமிழின படுகொலைகள் என்றும் மறைக்க - மறுக்கப்படாத சூழலில் உலகளவில் வரலாற்றுப் பதிவுகளாகியுள்ளன. அந்த வகையில் தமிழர் வரலாற்றில் மக்களால் ஜீரணித்துப்பாக்க முடியாத படுகொலைச் சம்பவங்கள் பல. அவ்வாறான கொடூரமான படுகொலைகளில் நவாலி படுகொலைச் சம்பவமும் ஒன்றாகும்.

இந்தப்படுகொலையின் 26 ஆவது அண்டு நினைவு நாள் இன்று (09.07.2021) வெள்ளிக் கிழமையாகும். நவாலி- வட்டு - யாழ்.பிரதான வீதியிலும் நவாலி சென். பீற்றர்ஸ் ஆலய வீதிகளிலும் - நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் வளாகத்திலும் களைப் படைந்து - ஆறுதலுக்காக தஞ்சமடைந்த வேளையில் 13 குண்டுகளுக்கு 147 பேர் சாவடைந்த கோரமான - கொடூரமான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்த விமான தாக்குதலில் 147 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை நாம் ஒரு கணம் மீட்டுப் பார்கின்றோம். இந்த மனிதாபிமானமற்ற - கொடூரமான நவாலி சென். பீற்றர்ஸ் மற்றும் ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய முன் இடம்பெற்ற மனிதக் கொலைகள் சர்வதேசத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், சம்பந்தப்பட்ட தமிழ் உறவகளையும், தமிழ் மக்களையும் சொல்லொணாத் துயரத்திற்கு இட்டுச் சென்றது.

இந்த தாக்குதலில் பலியானவர்களின் உறவுகளுக்கு இன்றுவரை எந்தவிதமான அரசின் உதவிகள், இழப்பீடுகள், நிவாரணங்கள் எவையும் வழங்கப்படாத நிலையே உள்ளது.

வலிகாமம் முழுவதும் இடம்பெற்ற வான் தாக்குதலினால் அந்தப்பகுதி முழுவதும் அதிர்ந்து கொண்டு இருந்தது. அந்த வேளையில் மாலை நேரத்தில் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த தருணத்தில் இலங்கை விமானப்பபடையினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

முன்னேறி பாய்தல் எனப்பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியிலிருந்தும் - அளவெட்டியிலிருந்தும் நிமிடத்திற்கு 30 இற்கும் மேற்பட்ட எறிகணை வீச்சுக்களை அடுத்தடுத்து நாலாபுறமும் மேற்கொண்டதுடன் விமானக் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

காயமடைந்தவர்களை காப்பாற்ற மருந்தகங்களோ மருத்துவர்களோ, சிகிச்சை நிலையங்களோ காணப்படாத அவலமான சூழல் அன்று நிலவியது. இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. குண்டு வீச்சில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயமும், சின்னக்கதிர்காம ஆலயமும் அயலிலுள்ள 67 இற்கும் மேற்பட்ட வீடுகளும் முற்றாக அழிந்து சிதைந்தன. 147 பேர் அந்த இடத்திலேயே இரத்தம் சிந்தி உயிரிழந்தனர்.

அன்றைய தாக்குதலின்போது பொது மக்கள் சேவையில் முனைப்புடன் செயல்பட்ட நவாலி மகா வித்தியாலய மாணவத் தலைவன் சாம்பசிவம் பிரதீஸ் தலைசிதறி மரணமானான். அன்றைய அந்த பயங்கரமான சூழலிலும் சேவையாற்றிய வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் ஜெ- 134 நவாலி வடக்கு கிராம அலுவலரான ஹேமலதா செல்வராஜா, சில்லாலை பிரிவு மூத்த கிராம அலுவலர் பிலிப்புப்பிள்ளை கபிலாசபிள்ளை ஆகியோரும் அந்தச் சம்பவத்தில் சாவடைந்த அரசாங்க அலுவலர்களாக பதியப்பட்டனர்.

அன்றைய தினம் இடம்பெயர்ந்த மக்களுக்கு தொண்டுப்பணியில் உணவு, குடிதண்ணீர், மற்றும் சேவைகளை வழங்கி கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்தமையை மறக்கமுடியுமா?

நவாலி படுகொலைச் சம்பவம் தொடர்பாக நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலய வீதியிலும், நவாலி வடக்கு புலவர் வீதியிலும் அமைக்கப்பட்டுள்ள நினைவு சின்னங்கள் இனப்படுகொலையை நினைவுட்டுகின்றன. ஒவ்வொரு ஜூலை 9 ஆம் திகதியும் இந்த நினைவு சின்னங்களில் ஒளியேற்றப்பட்டு வணங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# கொரோனா வைரஸ் லாம்ப்டா மாறுபாடு குறித்து நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை என்ன?

உலக சுகாதார நிறுவனம் அதன் முறையான விஞ்ஞா னப் பெயரான சி .37-ஆல் அறியப்பட்ட லாம்ப்டா மாறுபாட்டை ஏழாவது மாறுபாடு என்று அறிவித்தது. கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாடு உல கெங்கிலும் தொற்றுநோய்களின் வளர்ச்சியை அதிகரித்து வருகின்ற நிலையில், தற்போது லாம்ப்டா வகை மாறுபாடு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுகாதாரத்துறை நிபுணர்களால் அச்சுறுத்தல் கொண்ட பிறழ்வாக பார்க்கப்பட்டு வருகிறது.

ஜூன் 14 அன்று, உலக சுகாதார நிறுவனம் அதன் முறையான விஞ்ஞானப் பெயரான சி .37-ஆல் அறியப்பட்ட லாம்ப்டா மாறுபாட்டை ஏழாவது மாறுபாடு என்று அறிவித்தது. அதாவது இது கவனிக்க வேண்டிய ஒன்று.

டெல்டா மாறுபாட்டைப் போலவே, இப்போது 25 க்கும் மேற்பட்ட நாடுகளில் கண்டறியப்பட்ட லாம்ப்டா மாறுபாடும், அசல் வைரஸை விட அதிக அளவில் பரவக்கூடியதாக இருக்கும் என்ற அச்சம் பரவலாக உள்ளது. இருப்பினும் இது குறித்து போதுமான ஆய்வுகள் இல்லாததால் இது இன்னும் நிறுவப்படவில்லை.. பெரு மற்றும் இதர தென் அமெரிக்க நாடுகளில் நோய் தொற்றை ஏற்படுத்திய மாறுபாடு இதுவாகும். இந்த மக்கள் தொகையில் இது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளில் இது அடையாளம் காணப்பட்டுள்ளது.


**லாம்ப்டா மாறுபாடு புதியது அல்ல**

லாம்ப்டா மாறுபாடு புதிய பிறழ்வு அல்ல. கடந்த ஆண்டில் இருந்தே இது இருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் ஆக்ஸ்ட் மாதத்தில் இருந்தே உள்ளது. பெருவில், இது தோன்றியதாக நம்பப்படுகிறது, இது கிட்டத்தட்ட 80% தொற்றுநோய்களுக்கு காரணமாகிறது. அண்டை நாடான சிலியிலும் இது ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால், சமீப காலம் வரை, இது பெரும்பாலும் ஈக்குவடார், ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில் அதிகம் காணப்படுகிறது.

மார்ச் மாத இறுதியில் இருந்து, இந்த மாறுபாடு 25 க்கும் மேற்பட்ட நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இங்கிலாந்தில் பாதிக்கப்பட்ட 6 நபர்களும் சர்வதேச பயணிகள். ஆஸ்திரேலியாவிலும் இந்த மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளது.

**பல குறிப்பிடத்தக்க பிறழ்வுகள்**

உலக சுகாதார அமைப்பின் படி, லாம்ப்டா மாறுபாடு குறைந்தது 7 முக்கிய பிறழ்வுகளை கொண்டுள்ளதாக கூறியுள்ளது (டெல்டாவில் மூன்று பிறழ்வுகள் உள்ளன). இது பரவல் விகிதம் அதிகம் உள்ளிட்ட அதிகப்படியான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். மேலும் இயற்கை தொற்று அல்லது தடுப்பூசியின் மூலம் உருவாகியுள்ள ஆன்ட்டிபாடிகளுக்கு எதிரான மேம்பட்ட சக்தியை கொண்டிருக்கும். ஆல்பா மற்றும் காமா மாறுபாடுகளைக் காட்டிலும் அதிகப்படியான தொற்று திறனை கொண்டுள்ளது இந்த மாறுபாடு என்று சிலியில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவு கள் தெரிவிக்கின்றனர்.



(இங்கிலாந்து மற்றும் பிரேசிலில் தோன்றிய மாறுபாடுகள்). மேலும் சீனாவின் சினோ வாக் தடுப்பூசியின் செயல்திறனை முறிக்கும் வகையில் அமைந்துள்ளது லாம்ப்டா மாறுபாடு என்றும் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றனர். ஆனால், தற்போது வரை லாம்ப்டா மாறுபாடு குறித்து முறையாக அறிந்து கொள்ள இயலவில்லை.

இந்த மரபணு மாற்றங்களுடன் தொடர்புடைய தாக்கத்தின் முழு அளவிற்கும் தற்போது வரையறுக்கப்பட்ட சான்றுகள் உள்ளன, மேலும் எதிர்விளைவுகளின் தாக்கத்தை நன்கு புரிந்துகொள்வதற்கும், பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் பினோடைப் தாக்கங்கள் குறித்த மேலும் வலுவான ஆய்வுகள் தேவை என்று WHO ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது . தடுப்பூசிகளின் தொடர்ச்சியான செயல்திறனை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் தேவை என்றும் கூறியுள்ளது உலக சுகாதார அமைப்பு.

variant of interest என்று வழங்கப்பட்டுள்ள இந்த மாறுபாடு சம்பந்தப் பட்ட மரபணு மாற்றங்கள் நோய் பரவுதல், நோய் தீவிரம் அல்லது நோயெதிர்ப்பில் இருந்து தப்பித்தல் ஆகியவற்றை பாதிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் பல்வேறு மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க தொற்றை இந்த மாறுபாடு உருவாக்கியுள்ளது.

லாம்ப்டா உள்ளிட்ட 7 மாறுபாடுகளை வேரியண்ட் ஓவ் இண்டெரெஸ்ட் என்று வரையறை செய்துள்ளது உலக சுகாதார அமைப்பு. அதே நேரத்தில் அல்பா, பீட்டா, காமா மற்றும் டெல்டா ஆகிய மாறுபாடுகள் வேரியண்ட்ஸ் ஓவ் கன்சர்ன் என்று வரை செய்துள்ளது. இந்த மாறுபாடுகளின் பிறப்பிடத்தை வைத்து பெயர்கள் வழங்கப்படுவதை தவிர்க்கும் வகையில் கிரேக்க எழுத்துகள் கொண்டு இந்த மாறுபாடுகள் பெயரிடப்பட்டுள்ளது. ■

ஈழநாடு

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்

## வினாத்தாள் - I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 21. | 2 |
| 2. | 1 | 22. | 3 |
| 3. | 2 | 23. | 3 |
| 4. | 2 | 24. | 2 |
| 5. | 3 | 25. | 3 |
| 6. | 1 | 26. | 1 |
| 7. | 3 | 27. | 2 |
| 8. | 2 | 28. | 2 |
| 9. | 1 | 29. | 2 |
| 10. | 2 | 30. | 3 |
| 11. | 1 | 31. | 1 |
| 12. | 3 | 32. | 1 |
| 13. | 2 | 33. | 1 |
| 14. | 1 | 34. | 2 |
| 15. | 2 | 35. | 1 |
| 16. | 3 | 36. | 1 |
| 17. | 3 | 37. | 1 |
| 18. | 3 | 38. | 2 |
| 19. | 2 | 39. | 1 |
| 20. | 1 | 40. | 2 |

01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

06) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் .......... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .......... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .......... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம.

(3 புள்ளிகள்)

# இராஜாங்க அமைச்சு பதவியை துறக்க தயார்; ஆனால் நரிகளின் ஊளையிடலுக்கு அஞ்சமாட்டேன்



கொழும்பு, ஜூலை 09

"இராஜாங்க அமைச்சுப் பதவியை துறப்பதற்கு நான் தயார். இது தொடர்பில் கட்சிக்கும் அறிவித்துள்ளேன். கட்சி கட்டளையிட்டால் நிச்சயம் விலகுவேன். ஆனால், நரிகளின் ஊளையிடலுக்கு அஞ்சப்போவதில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரசின் தீர்மானங்களை ஏற்கமுடியாவிட்டால்இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரசியலிலிருந்து வெளியேறுவதே சிறந்தது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்குப்பதிலடி கொடுக்கும்வகையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் எனது கட்சிக்காகச் செய்ய வேண்டிய விடயங்களை நிச்சயம் வெய்வேன். நாய் குரைப்பதால் மலை சரியப்போவதில்லை. எமது கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

அவர்களும், மக்களும் எதிர்நோக்கும் பிரச்னை பற்றியே பேசினேன். மாறாக எனக்கு அமைச்சு பதவி என்பது பிரச்னையே கிடையாது. எனவே, பிரச்னை தீரும்வரை போராடுவோம்.

நரிகள் ஊளையிடுவதால் நான் பதவி விலகமாட்டேன். பதவி விலகத்தயார் என கட்சிக்கு அறிவித்து விட்டேன். கட்சிக்காக இதையும் செய்யத் தயார். கட்சி மற்றும் தலைவர் சொல்வார்களாயின் நிச்சயம் பதவி துறப்பேன்" - என்றார். (இ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் முதல் தடுப்பூசி

## அரசு அறிவிப்பு




**கொழும்பு, ஜூலை 09**

**நாட்டின் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் அடுத்த வாரம் முதல் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை கல்விசாரா ஊழியர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 155 பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (இ)

# ஒப்பாரி வைக்காமல் வெளியே வாருங்கள்

## தயாசிறிக்கு வெல்கம அழைப்பு



கொழும்பு, ஜூலை 09

"அரசுக்குள் இருந்துகொண்டு அழுது புலம்பாமல், துணிகரமாக வெளியே வாருங்கள். அவ்வாறு வந்தால் அரவணைத்துப் பயணிக்க தயார்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் பாராளுமன்றஉறுப்பினர்குமாரவெல்கம.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் எனது சிறந்த நண்பர். தற்போது பற்றிக் அமைச்சு குறித்து அழுது புலம்புகின்றார். நான் அமைச்சுப் பதவியின் பின்னால் ஓடவில்லை. எனவே, என் வழியை தயாசிறி பின்பற்ற வேண்டும்.

இந்த அரசு கப்பல்போல் மூழ்கப்போகின்றது. எனவே, துணிகரமாக வெளியேறுமாறு தயாசிறியிடம் நான் கோருகின்றேன்.

எனது பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. ஒரு கட்சி இல்லையேல் 10 கட்சிகள் உள்ளன. ஏதாவது ஒரு கட்சி எனக்குக் கிடைக்கும்" - என்றார். (இ)

# பஸிலின் அதிரடி ஆட்டத்தை பொறுத்திருந்து பாருங்கள்!

## அமைச்சர் ரோஹித தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 09

"இலங்கை அரசியல் களத்தில் சகலதுறை ஆட்டக்காரரே பஸில் ராஜபக்ஷ. அவரின் அதிரடி ஆட்டத்தைப் பொறுத்திருந்து பாருங்கள்."

- இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கிரிக்கெட் அணியொன்றை எடுத்துக்கொண்டால் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பார்கள். ஆனால், சகலதுறை ஆட்டக்காரர்களுக்கு எல்லாம் தெரியும்.

இவ்வாறுதான் இலங்கை அரசியல் களத்தில் பஸில் ராஜபக்ஷ சகலதுறை ஆட்டக்காரர். அவரின் அதிரடி ஆட்டத்தைப் பொறுத்திருந்து பாருங்கள்" - என்றார். (இ)

# பைசர் தடுப்பூசி ஏற்றும் பணி இடைநிறுத்தம்

கொழு ம்பு, ஜூலை 09

கொவிஷீல்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசியின் முதலாவது தடுப் பூசி டோஸினைப் பெற்றவர்களுக்கு, இரண்டாவது டோஸாக பைசர் தடுப்பூசியை ஏற்றும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் மூன்றாம் வாரத்தில் இலங்கைக்கு மேலும், 14 இலட்சம் கொவிஷீல்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசி கிடைக்க வுள்ளதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது. (இ)

# மேலும் இரு கிராமங்கள் முடக்கம் 7 பிரதேசங்கள் விடுவிப்பு



கொழும்பு, ஜூலை 09

மாத்தளை மாவட்டத்தில் மேலும் இரண்டு கிராமங்கள் நேற்றுக் காலை 06 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் வேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில், மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹகொட்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் அகலவத்தை கிராமம் மற்றும் ஹரஸ்கம கிராமம் ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இரண்டு மாவட்டங்களின் 7 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்றுக் காலை 06 மணி முதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவின் கீழுள்ள 05 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தின் மஹவெல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இரண்டு கிராம உத்தியோகததர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது. (இ)

# சில அமைச்சுகளுக்கான துறைகளில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 09

அதிவிசேட வர்த்தமானி மூலம் சில அமைச்சுகளுக்கான துறைகள், பொறுப்புகள் மற்றும் நிறுவனங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானிக்கு அமைய நிதி, பௌத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கிய அமைச்சுகளில் நிதி அமைச்சு மாத்திரம் தனியான அமைச்சாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் என்ற புதிய அமைச்சும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை வகுப்புத் திணைக்களம், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு உள்ளிட்ட 10 நிறுவனங்கள் இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட செலன்திவ இன்வெஸ்மன்ட் லிமிடட் புதிய வர்த்தமானிக்கு அமைய நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கவுள்ளது. கரையோரப் பாதுகாப்பு, தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு என்ற அமைச்சும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழிருந்த சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையும் அதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

புதிதாக விடுக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக சேதனப் பசளை உற்பத்தி, ஊக்குவிப்பு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் , உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தேசிய உரச் செயலகம், அரச உர நிறுவனங்கள் உள்ளிட்ட 07 நிறுவனங்கள் புதிய இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கனடா, அமெரிக்காவை இந்தவாரம் இன்னொரு வெப்ப அலை தாக்கும்!

## மரணங்களும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை

நியூயோர்க், ஜூலை 09

**கனடா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட தீவிர வெப்ப அலையால் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இதற்கு காலநிலை மாற்றமே இதற்கு பிரதான காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.**

தீவிர வெப்ப அலை இந்த வார இறுதியில் மீண்டும் கனடா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளை தாக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள் ளனர்.

தற்போதைய கரியமில வாயு உமிழ்வு தொடர்ந்தால் 2040களில் ஒவ்வொரு ஐந்து முதல் 10 வருடங்களுக்கு இது போன்ற தீவிர வெப்ப அலை பதிவாகக்கூடும் எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, காலநிலை மாற்றத்தின் விளைவு இல்லா மல் திடீர் வெப்ப அதிகரிப்பு "கிட்டத்தட்ட சாத்தியமற்றது" என 27 விஞ்ஞானிகள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு முடிவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் வட அமெரிக்கா உள்ளிட்ட சில பகுதிகளில் இத்தகைய வெப்ப அலைகளை கிட்டத்தட்ட 150 மடங்கு அதிகமாக்கியுள்ளது.

அசாதாரண வெப்பநிலை ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை இயல்பான நிகழ்வு என்று விஞ்ஞானிகள் கூறினர். இருப்பினும் இந்தக் கோடை யின் ஆரம்பத்தில் முன்னோடி யில்லாத வகையில் வெப்பம் அதிகரித்துள்ளமை காலநிலை மாற்றத்தின் விளைவே என ஆய் வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




"தீவிர வெப்ப அலைகள் மரணங்களுக்கு வழிவகுக்கும் என்பதை மக்கள் உணர வேண் டும்" என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கால நிலை விஞ்ஞானி ப்ரீடெரிக் ஓட்டோ கூறினார்.

"வெப்ப அலைகள் உண்மை யில் மற்ற அனைத்து தீவிர காலநிலை மாற்ற நிகழ்வுகளை யும் விட மிக மிக தீவிரமான வையாக உள்ளன" என்று ஓட்டோ கூறினார். "வெப்ப அலைகளின்போது மரணங் களைத் தடுப்பதற்கான திட்டங் களை முன்னுரிமை அடிப் படையில் அரசாங்கங்கள் வகுக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் கனடா வின் சில பகுதிகளை ஜூன் மாத இறுதியில் கடும் வெப்ப அலைகள் தாக்கின. மின் இணைப்பு பிளாஸ்ரிக் குழாய்கள் உருகும் அளவுக்கு கனடாவின் மேற்கு பகுதிகளில் வெப்ப நிலை அதிகரித்தது.

கடந்த மாதத்தில் கனடா மூன்று முறை வரலாற்றியில் இல்லாத அளவு தீவிர வெப்ப அலைகளின் தாக்கத்தைப் பதிவு செய்தது. ஜூன் 29 அன்று 49.6 செல்சியஸ் வரை வெப்ப நிலை அதிகரித்தது.

இவ்வாறான நிலையில் மற்றொரு தீவிர வெப்ப அலை இந்த வார இறுதியில் கனடா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளை தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர். (ஐ)



# அந்தாட்டிக்காவில் புதிய தாவரம் கண்டறிந்தனர் இந்திய ஆய்வாளர்

## பாரதி என்று பெயர் சூட்டப்பட்டது!

அந்தாட்டிக்கா கண்டத்தில் புதிய தாவர இனம் ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். அதற்கு அவர் கள் 'பாரதி' என்று பெயரிட் டுள்ளனர். துருவ பகுதிகளை ஆய்வு செய்துவரும் தாவரவி யல் நிபுணர்கள் 2017ஆம் ஆண்டு ஒரு வகை பாசியை கண்டறிந்தனர். அதுபற்றி தொடர்ச்சியாக ஆய்வுகள் இடம்பெற்றன. எனினும், அது எந்த வகையை சேர்ந்தது என் பதை சுமார் ஐந்து ஆண்டு களின் பின்னர் இப்போதுதான் உறுதி செய்துள்ளனர்.

2017ஆம் ஆண்டு அந்தாட் டிக்காவின் லார்ஸ்மன் மலைப் பகுதி என்ற இடத்தை பேராசி ரியர் பெலிக்ஸ் பேஸ்ட் என்ப வர் பச்சை நிறத்திலான ஒரு மாறுபட்ட தாவரத்தை கண்ட றிந்தார். இது இந்தியா அமைத் துள்ள பாரதி ஆய்வு மையம் அருகே கண்டுபிடிக்கப்பட்டது.

சாதாரணமாக தாவரங்கள் வளர்வதற்கு நைதரசன், பொட் டாசியம், பொஸ்பரஸ், சூரிய ஒளி, தண்ணீர் என்பன தேவை. அந்தாட்டிக்காவில் ஒரு சத வீதம் மட்டுமே பனியால் சூழப்படாத நிலப்பகுதி உள் ளது. இந்தநிலையில் இங்கு இந்த பாசி தாவரம் முளைத் தது எப்படி என்று ஆய்வாளர் கள் ஆய்வு செய்தனர்.

5 ஆண்டுகள் தொடர்ந்த ஆய்வில், பென்குயின்கள் அதி கம் வாழும் பகுதியிலேயே இவை வளர்வது கண்டறியப் பட்டது. அத்துடன் எச்சங்களி லேயே இந்த பாசி வளர்கிறது என்றும் கண்டறியப்பட்டது.

இங்குள்ள காலநிலையில் அந்த இயற்கை உரம் மக்கிப்போவ தில்லை என்கிறார் பேராசிரியர் பெலிக்ஸ் பேஸ்ட்.

எனினும், சூரிய ஒளி எப் படி கிடைக்கிறது என்பது குறித்து இதுவரை ஆய்வாளர்க ளால் கண்டறிய முடிய வில்லை. இருப்பினும் சூரிய ஒளி கிடைக்கும் காலத்தில் இந்த பாசிகள் வளர்ந்து பின்பு விதை நிலைக்கு சென்று மீண்டும் சூரியஒளி கிடைக்கும் போது உருகும் பனி நீரைப் பயன்படுத்தி இவை முளைக் கின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். எனினும், மைனஸ் 76 பாகை வெப்ப நிலையில் இந்தப் பாசிகள் எப்படி தாக்குப்பிடிக்கின்றன என்பதும் ஆய்வாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கிறது.

எது எப்படி இருப்பினும், அந்தாட்டிக்காவில் அண்மைக் காலமாக தாவரங்கள் பெருகி வருகின்றன. அந்தாட்டிக்கா இவ்வாறு பசுமையாக மாறு வது விஞ்ஞானிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், அந்தாட்டிக்காவின் பனிக்கட்டி படலத்துக்கு கீழே என்ன இருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது. கொடிய நோய்களை பரப்பும் நுண்ணுயிர்கள்கூட இருக்க லாம். பனிக்கட்டி உருகிய பிறகு அவை வெளியேறி பரவ லாம் என்ற அச்சநிலை உள்ள தாக பஞ்சாப் மத்திய பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ராகவேந்திர பிர சாத் திவாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# 51 செ.மீ. உயர பசு பங்களாதேஷில்!



டாக்கா, ஜூலை 09

பங்களாதேஷில் 51 சென்ரி மீற்றர் உயரம் கொண்ட பசு வைக் காண்பதற்காக ஆயிரக் கணக்கானோர் கண்டுசெல்கின் றனர்.

தலைநகர் டாக்கா அருகே சாரிகிராமில் உள்ள ஷிகோர் வேளாண் பண்ணையில் ராணி என்ற பசு உள்ளது. இது 51 செ.மீ. உயரம், 66 செ.மீ. நீளம், 26 கிலோ எடை கொண்டதாக உள்ளது. 2 வயதான இந்தப் பசுதான் உலகிலேயே குள்ள மான பசு என அதன் உரிமை யாளர் கூறுகிறார்.

இந்த பசுவின் படம் சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. பல் வேறு ஊடகங்களிலும் இது தொடர்பான செய்தி வெளி யானது. இதனால், கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகள், விதிமுறைகளையும் மீறி இந்தப் பசுவை பார்ப்பதற்காக ஆயிரக் கணக்கானோர் அந்த பண் ணைக்கு செல்கின்றனர். அந்தப் பசுவுடன் அனைவரும் செல்பி எடுத்துக் கொள்கின்றனர்.

இதையடுத்து, பார்வையா ளர்களை அனுமதிக்க வேண் டாம் என அரசு அதிகாரி ஒரு வர் பண்ணை உரிமையாளரி டம் தெரிவித்துள்ளார். (ஐ)



# இங்கிலாந்தில் 20பேர் கைது!

லண்டன், ஜூலை 09

இங்கிலாந்து உதைபந் தாட்ட அணியின் வெற்றியை கொண்டாடிய ரசிகர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த அரையிறுதி ஆட்டத் தில் டென்மார்க் அணியை இங்கிலாந்து வெற்றி கொண்டு இறுதியாட்டத் துக்கு முன்னேறியது.

1966ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர், இங்கிலாந்து முன்னேறிய முதலாவது பெரிய இறுதிப் போட்டி இதுவாகும். இத னால், லண்டன் தெருக்களில் ரசிகர்கள் பெரும் கொண் டாட்டங்களை முன்னெடுத் தனர்.

இதன்போது, மத்திய லண் டனில் உள்ள பிக்காடில்லி சர்க்கஸில் ரசிகர்கள் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர். இதை யடுத்தே இருபது பேர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# ஹெய்ட்டி ஜனாதிபதி கொலை: சந்தேகநபர்கள் சுட்டுக்கொலை!

போர்ட் ஒ பிரின்ஸ், ஜூலை 09

ஹெய்ட்டி ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸை படுகொலை செய்தனர் என்று சந்தேகிக்கப்படும் நான்கு பேர் படையினருடன் நடந்த மோதலில் சுட்டுக்கொல்லப்பட்டனரென பொலிஸார் தெரி வித்துள்ளனர்.



மேலும் இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நாட்டின் தலைநகரான போர்ட் - ஓ - பிரின்ஸில் மீதமுள்ள சில சந்தேகநபர்களுடன் அதி காரிகள் போராடி வருகின் றனர் என்றும் பொலிஸ் மா அதிபர் லியோன் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

லியோன் சார்ள்ஸ் கொல் லப்பட்ட நான்கு பேரும் "கூலிப்படையினர்" என்று கூறியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் ஜனாதி பதியாக பதவியேற்ற 53 வய தான ஜோவெனல் மொய்ஸின் வீட்டுக்குள் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் புகுந்த கூலிப்டையினர் அவரை சுட்டுக் கொன்றனர்.

இதன்போது ஜனாதிபதி மொய்ஸின் மனைவி மார்ட்டின் மொய்ஸ் பலத்த காயம டைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



# கோபா அமெரிக்க தொடர்: இறுதியில் ஆர்ஜென்ரீனா!

பிரேஸிலியா, ஜுலை 09

கோபா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு ஆர்ஜென்ரீனா அணி முன்னேறியது. அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான கொலம்பியாவை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி பெற்றது ஆர்ஜென்ரீனா.

தென் அமெரிக்க அணிகளுக்கு இடையிலான 47ஆவது கோபா அமெரிக்க உதைபந்தாட்ட தொடர் பிரேஸிலில் நடக்கிறது. பிரேஸிலியாவில் நடந்த அரையிறுதி போட்டியில் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனாவும், கொலம்பியாவும் மோதின.

போட்டி தொடங்கிய 7ஆவது நிமிடம் மெஸ்ஸி தட்டிக் கொடுத்த பந்தை வாங்கிய மார்டினஸ் கோல் அடித்து அசத்தினார். இரண்டாவது பாதியில் கொலம்பிய வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர். 61ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் தடுப்புகளை தகர்த்து உள்ளே சென்ற தியாஸ், எளிதாகக் கோல் அடித்தார்.

இதன் பின்னர் இரு அணியினரும் கோல் அடிக்கவில்லை. முடிவில் போட்டி 1-1 என சமநிலையில் முடிவடைந்தது. கோபா கிண்ண விதிகளின்படி கூடுதல் நேரம் வழங்கப்படவில்லை. இதனால், சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி - தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

5 வாய்ப்புக்களில் முதல் வாய்ப்பில், குவாட்ரடோ (கொலம்பியா) ஒரு கோல் அடித்தார். வழக்கமாக கடைசியில் வரும் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி பதில் கோல் அடித்தார் (1-1).

இரண்டாவது வாய்ப்பில் சான்செஸ் (கொலம்பியா), டி போல் (ஆர்ஜென்ரீனா) வீணடித்தனர், மூன்றாவது வாய்ப்பில், மினா (கொலம்பியா) அடித்த பந்தை ஆர்ஜென்ரீனாகோல் காப்பாளர்எமிலியானோ தடுத்தார். மறுபக்கம் பரேதேஷ்கோல் அடிக்க, ஆர்ஜென்ரீனா 2-1 என முன்னிலை பெற்றது.

நான்காவது வாய்ப்பில் போர்ஜா (கொலம்பியா), மார்டினெஸ் கோல் அடிக்க, ஆர்ஜென்ரீனா 3-2 என தொடர்ந்து முன்னிலை வகித்தது. இறுதி வாய்ப்பில் கோல் அடித்தாக வேண்டிய கட்டாயத்தில் வந்த கொலம்பிய வீரர் கார்டோனா அடித்த பந்தை, எமிலியானோ அசத்தலாக தடுத்தார். இதையடுத்து 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு நுழைந்தது.

இறுதியாட்டத்தில் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா, நெய்மர் தலைமையிலான பிரேஸில் அணியை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ்: சானியா இணை தோல்வி!

லண்டன், ஜுலை 09

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் கலப்பு இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சானியா மிர்ஷா - ரோஹன் போபண்ணா இணை தோல்வியடைந்தது.

நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன், லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் கலப்பு இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சானியா - போபண்ணா இணை, கிளாபாக் - ரோஜர் இணையை எதிர்கொண்டது.

இதில் 3-6, 6-3, 9-11 எனக் கடுமையாகப் போராடி தோற்றது சானியா இணை.

இந்த ஆட்டம் இரு நாள்களாக நடைபெற்றது. செவ்வாய் அன்று முதல் செற்றில் சானியா இணை தோற்றது. அடுத்த நாள் சானியாவும் போபண்ணாவும் சிறப்பாக விளையாடினார்கள். 2ஆவது செற்றை வென்று, கடைசி செட்டில் கடுமையாகப் போராடியும் வெல்ல முடியாமல் போனது. (ஐ)

# யூரோ கிண்ண தொடர்: இறுதியில் இங்கிலாந்து

லண்டன், ஜுலை 09

யூரோ கிண்ணத்துக்கான அரையிறுதி போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கைத் தோற்கடித்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது இங்கிலாந்து அணி.

யூரோ கிண்ணத் தொடரில் உலக தரவரிசையில் 4ஆவது இடத்திலிருக்கும் இங்கிலாந்து அணியும், 12ஆவது இடத்திலிருக்கும் டென்மார்க் அணியும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் நள்ளிரவு லண்டனில் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் - 30ஆவது நிமிடத்தில் கோலடித்து முன்னிலை பெற்றது டென்மார்க். 25 மீற்றர் தொலைவில் இருந்து 'ப்ரீ கிக்' மூலம் அற்புதமான கோலடித்தார் மைக்கேல் டம்ஸ்கார்ட்.

அடுத்த 9ஆவது நிமிடத்திலேயே இதற்கு பதிலடி கொடுத்தது. இங்கிலாந்து. டென்மார்க் வீரர் சைமன் விட்ட தவறை சாதகமாக்கி சைமன்ஜேர் கோல் அடித்தார்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கக் கடுமையாகப் போராடின. ஆனால், கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. 1 - 1 என போட்டி சமநிலையில் நீடித்ததால் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. 104ஆவது நிமிடத்தில்கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கோலடித்தார் இங்கிலாந்து கப்டன் ஹரி கேன்.

இதனால் 2-1 என வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது இங்கிலாந்து அணி.

முதல்முறையாக யூரோ கோப்பை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது இங்கிலாந்து அணி. 1966 உலகக் கோப்பையை வென்றபிறகு 55 வருடங்கள் கழித்து மீண்டும் ஒரு பெரிய போட்டியில் சம்பியன் ஆகும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இங்கிலாந்தின் கனவை இத்தாலி தகர்க்குமா? (ஐ)



# பெடரர் அதிர்ச்சி தோல்வி!

லண்டன், ஜுலை 09

விம்பிள்டன் தொடரில் பிரபல வீரர் ரோஜர் பெடரர் காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறினார்.

விம்பிள்டன் பட்டத்தை எட்டு முறை வென்றுள்ள பெடரர் காலிறுதியில் போலந்தை சேர்ந்த ஹூபர்ட் ஹர்கஸை எதிர்கொண்டார். எதிர்பாராதவிதமாக 3-6, 6-7(4), 0-6 என்கிற நேர் செற்களில் தோல்வியடைந்தார். பெடரர்.

கடைசியாக 2018 அவுஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தை வென்றார் பெடரர். அதன்பிறகு அவரால் மற்றுமொரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்ல முடியாத நிலைமையே உள்ளது. (ஐ)

# தசூன் சானகவிடம் மீண்டும் தலைமை!

கொழும்பு, ஜுலை 09

சகலதுறை ஆட்டக்காரரான தசூன் சானக இந்திய அணிக்கு எதிரான தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள், இருபது - 20 போட்டிகளின் தலைவராகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒக்ரோபரில் ஆரம்பமாகும் இருபது - 20 உலகக் கிண்ணம் வரை அவர் இலங்கை அணியின் தலைவராக இருப்பார் என்று கூறப்படுகின்றது. இதனிடையே, தனஞ்சய டிசில்வா இந்திய தொடருக்கான இலங்கை அணியின் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

29 வயதான தசூன் சானக, 2019 பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இலங்கை அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். அப்போது இருபது - 20 தொடரை 3 -0 என்ற ரீதியில் இலங்கை வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் வீசா பிரச்னைகளால் சானக பங்கேற்கவில்லை. இதைத் தொடர்ந்து மத்தியூஸ் மீண்டும் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# ஆஷ்லே பார்டி அரையிறுதியில்!

லண்டன், ஜுலை 09

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி முதன்முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதி போட்டி ஒன்றில், அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, சகநாட்டவரான அஜ்லா ரொம்ஜெனோவிச்சை எதிர் கொண்டார்.

இதில், 6 -1, 6 -3 என்ற செற்கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில், ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் 6-2, 6-3 என்ற நேர் செற்களில் செக் குடியரசின் கரோலினா முச்சோவாவை தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# இலங்கையில் எரிபொருள் சந்தையும் சீன வசமாகுமா?

## இல்லை என்று மறுக்கின்றார் வலுசக்தி அமைச்சர் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் எரிபொருள் விநியோகத்துக்கான பொறுப்பை சீனாவுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கோ வழங்குவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, ”நாட்டில் எரிபொருள் விநியோகத்துக்கான நடவடிக்கை சீன நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது என சமூகத்தில் கதை அடிபடுகின்றது. சமூகத்தில் கதைக்கப்படும் விடயங்கள் இந்த ஆட்சியின் கீழ் நடந்தும் உள்ளன. இது உண்மையா என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு உண்மையாக இருந்தால் மின்விநியோக பொறுப்பும் சீன வசமாகும்” - என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில,

”சீனாவுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கே எரிபொருள் விநியோக நடவடிக்கையை ஒப்படைப்பது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இதுதொடர்பில் கலந்துரையாடல்கூட இடம்பெறவில்லை. இதனை மிகவும் பொறுப்புடனேயே கூறுகின்றேன்” - என்றார்.(இ)



# அரசின் கைது நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றை நாடுகின்றார் ரணில்

## ஐ.தே.கவின் சட்ட நிபுணர்களுக்கு ஆலோசனை



**கொழும்பு, ஜூன் 9**

**நாட்டில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைத் தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்திப் பொலிஸார் கைதுசெய்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்வதற்கும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைதுசெய்வதற்கும் முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய கட்சியின் சட்ட நிபுணர்கள் அடுத்த வாரம் உயர் நீதிமன்றத்தில் இதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளது எனத் தெரியவருகின்றது. (இ)



# அல்லைப்பிட்டியில் ஓட்டோ சாரதி 6 கிலோ கேரள கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 09

அல்லைப்பிட்டியில் ஓட்டோவில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவைக் கடத்திச் சென்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 3 பொதிகளில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 56 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடம் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவும் ஓட்டோவும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (இ-3)

# பஸிலின் பதவியேற்பு அரசுக்கு வலுச்சேர்ப்பு

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



கொழும்பு, ஜூலை 09

பஸில் ராஜபக்ஷ பதவியேற்றுக் கொண்டமை அரசை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தன்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பஸில் ராஜபக்ஷ பதவியேற்றமை தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறித்தவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

”நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள பஸில் ராஜபக்ஷவின் ஆளுமை என்பது எமது மக்களால் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும்.

அவ்வாறான ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் பதவியேற்றுள்ளமை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும் பயணித்துக் கொண்டிருக்கும் எமது அரசை மேலும் வலுப்படுத்தி இருக்கின்றது.

அதேபோன்று, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் தொடர்பான நம்பிக்கையையும் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மேலும், கடந்த காலங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்து, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கொண்ட வேலைத்திட்டங்களும், எம்மால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர் வழங்கிய ஒத்துழைப்புக்களும் வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் நிலையான இடத்தைப் பிடித்திருக்கின்றமையால், அவரின் தற்போதைய பதவியேற்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது” - என்றுள்ளது. (இ)

# 15 வயது சிறுமி விற்பனை விவகாரம்: மேலுமோர் இணையதள உரிமையாளர் மாட்டினார்!

கொழும்பு, ஜூலை 09.

கல்கிசை பகுதியில் 15 வயது சிறுமி ஒருவரை இணையத்தளம் ஊடாக பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்வதற்காக விளம்பரம் செய்த மேலும் ஓர் இணையத்தளத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பத்திரமுல்ல பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நான்கு இணையத்தளங்கள் ஊடாக இவ்வாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரையில் இரண்டு இணையத்தளங்களின் உரிமையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 35 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களில் மாலைதீவுகளின் முன்னாள் இராஜாங்க அமைச்சர், மிஹிந்தலை பிரதேச சபை உப தவிசாளர், பிரபல வர்த்தகர் ஒருவர், மதகுரு ஒருவர், கப்பல் கப்டன், கப்டனின் உதவியாளர் ஒருவர் மற்றும் கடற்படையின் விசேட மருத்துவ நிபுணர் உள்ளிட்டோர் அடங்குகின்றனர். (இ)

# பஸிலுக்கு ஆசி வேண்டி யாழில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 09

பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவியேற்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி யாழ்ப்பாணத்தில் நேற்று விசேட பூஜை வழிபாடு நடத்தப்பட்டது.

கலாநிதி யோகராஜன் அறக் கட்டளை அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.யோகராஜனின் ஏற்பாட்டில் இந்த வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதகுருக்களின் பங்குபற்றுதலுடன் பூஜை வழிபாடு நடத்தப்பட்டது. இதில் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா



நிலைமை காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்டவர்களோடு பூஜை வழிபாடு இடம்பெற்றது. (இ-3)

# களுதாவளையில் விபத்து; மூவர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, ஜூலை 09.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் களுதாவளையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுதாவளையிலிருந்து களுவாஞ்சிகுடி நோக்கிப் பணித்த மோட்டார் சைக்கிளும், கல்லாறுப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. (இ)

## யாழ்.மாவட்டத்தில்...

பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் ஆறு பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 418 பேருக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் 10 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**யாழ்.மாவட்டத்தில் 10 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 04 பேர்,

தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் 02 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 06 பேர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 07 பேர்,

**வவுனியா மாவட்டத்தில் 05 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

வவுனியா தெற்கு வைத்தியசாலையில் 02 பேர்,

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேர்**

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 53 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் யாழ்ப்பாணத்தில் 06 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில்,

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 வயதுச் சிறுமி ஒருவர் உட்பட்ட ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை,

உடுவிலில் ஒருவயது ஆண்குழந்தை ஒன்றுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்ட...

பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 2ஆம் கட்டத்தின் முதலாவது தடவை தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் கடந்த 5ஆம் திகதி முதல்நாளில் யாழ் மாவட்டத்தில் 9,465 பேருக்கும், 6ஆம் திகதி இரண்டாம் நாளில் 9,457 பேருக்கும், 7ஆம் திகதி மூன்றாம் நாளில் 12,034 பேருக்கும், நேற்று நான்காம் நாளில் 7,497 பேருக்கும் என மொத்தமாக 38,456 பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

அத்துடன், பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசியேற்றும் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 18 வயதிற்கு மேற்பட்ட ஆபத்து நிலை உடைய கர்ப்பவதித் தாய்மார்கள், 35 வயதுக்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பவதித் தாய்மார்களுக்கும், அத்துடன் முன் களப் பணியாளர்களாக உள்ள கர்ப்பவதித் தாய்மார்களுக்கும் அவர்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்திய சாலைகளிலும் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## ஜனாதிபதி, பிரதமர்...

நேற்று வியாழக்கிழமை,அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றிருந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி சமிந்த விஜயசிறி, இலங்கை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, மேலும் கூறுங்கியில்,

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வலுசக்தி அமைச்சராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். எனக்கு மேல் இவர்கள் இருவர் மட்டுமே உள்ளனர். இவர்கள் இருவரும் எப்போதுமே எனது அமைச்சின் விவகாரங்களில் தலையிட்டு அழுத்தம் கொடுத்ததில்லை. ஆலோசனைகளை வழங்கியுள்ளனர், தகவல்களை கேட்டறிந்துள்ளனர், ஆனால், ஒருபோதும் அழுத்தம் கொடுத்ததில்லை. ஜனாதிபதி, பிரதமரை தவிர வேறு எவருக்கும் யாருடைய அழுத்தங்களுக்கும் கட்டுப்பட மாட்டேன்" என்றார்.

## உயர்தர...

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. புத்திக பத்திரண எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த போதே இதனைத் தெரிவித்தார். இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு அமர்ந்த மாணவர்களின் செய்முறைப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

"2020 க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களின் பெறுபேறுகளை வழங்க முடியவில்லை. ஏனெனில் கீழைத்தேய, மேலைத்தேய இசை மற்றும் நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்னும் நடத்தப்படவில்லை" என புத்திக பத்திரண எம்.பி. கூறினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ், "நாம் விரைவில் செய்முறை பரீட்சைகளை நடத்த முயற்சிப்போம்" என அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

## 40 பேர் மரணம்...

பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மரணித்தோரில் 11 பெண்களும், 29 ஆண்களும் அடங்குகின்றனர். இவர்களில் 28 பேர் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களாவர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 391 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## நிதி அமைச்சராக...

றுள்ளார்.

இதேவேளை, நிதி அமைச்சராகப் பதவி வகித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயல்படுத்துகை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வுகளில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷவின் துணைவியார் திருமதி புஷ்பா ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# அடக்குமுறைக்கான புதிய வழியை அரசு பயன்படுத்த ஆரம்பித்துள்ளது

## பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 09

கொரோனாவைப் பயன்படுத்தி புதிய அடக்குமுறை வழியை அரசு பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. போராட்டங்களில் ஈடுபடுவோர் தனிமைப் படுத்தப்பட்டு தொலை தூர இடங்களுக்கு தனி மைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக பத்தரமுல்லை பாராளுமன்ற சுற்று வட்ட பகுதியில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் அமைதியான போராட்டம் ஒன்றை இன்று (நேற்று ) முன்னெடுத்தது.

ஆனால், பொலிஸார் மிகவும் அராஜகமான முறையில் செயற்பட்டு போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இரண்டு பௌத்த துறவிகள் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட 31 பேர் வரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களை பி.சி.ஆர்.,அன்ரிஜென் பரிசோதனைகள் எதுவுமின்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர்களை தொலை தூரங்களில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது அரசின் புதிய அடக்குமுறை வழி .கொரோனாவை பயன்படுத்தி மக்களின் உரிமை,ஜனநாயக போராட்டங்களை அடக்குவதற்கு அரசு தயாராகி விட்டது. பொலிஸாரை முன்னிறுத்து அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பிலுள்ள மக்களின் உரிமைகள் இந்த அரசினால் மறுக்கப்பட்டுள்ளன. அரசுக்கு எதிராக மக்கள் வாய் திறக்கக்கூடாது என நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசினால் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கூறப்படுகின்றது. ஆனால், மக்களின் ஜனநாயக உரிமைப்போராட்டங்களுக்கு எப்போதும் ஐக்கிய மக்கள் சக்தி உறுதுணையாக நிற்கும் என்றார்.

## 1,223 பேருக்கு...

பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 69 ஆயிரத்து 899 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,453 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 39 ஆயிரத்து 584 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 924 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## கசப்பான...

நேற்று புதிய நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நான் பொறுப்பெடுத்துள்ள சவாலை மேற்கொள்வதற்கு அனைவரினதும் பூரண ஒத்துழைப்பும் அவசியம்.

நான் கடினமான ஒரு விடயத்தைப் பொறுப்பேற்றுள்ளேன். சவாலை ஒன்றிணைந்து வெற்றிகொள்வோம்.

பொதுமக்களின் தேவைகளே இந்த அரசினதும் எனதும் முன்னுரிமையாக அமையும்.

தற்போது பிரச்னை என்ன என்பது தொடர்பான புரிதல் எனக்கு இருக்கின்றது.

நாட்டின் நலன் கருதி தீர்மானங்களை எடுக்கும்போது தந்தை ஒருவரைப் போன்று சில நேரங்களில் கசப்பான விடயங்களைச் செய்ய வேண்டியேற்படும். அவை உண்மையாகவே பொதுமக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டதாக இருக்கும்" - என்றார். (இ)

## ஆளுங்கட்சி...

டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்தப் பதவியை ஜயந்த கொட்டகொட வகித்ததுடன், அவர் பதவியிலிருந்து விலகியதால் சாகர காரியவசம் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சபாநாயகர்...

ஆண்டுக்கு பின்னர் பஸில் ராஜபக்ஷ மீண்டும், பாராளுமன்றத்தில் சபாபீடத்துக்குள் வருவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக, "மொட்டு" கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கொட்டகொட எம்.பி. பதவி துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழில் மேலும்...

விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போரினால் இடம்பெயர்ந்து தற்போதும் வேறு இடங்களில் வசித்து வரும் குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. பல்வேறு பிரதேசங்கள் மீள்குடிமர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மீள்குடியமராத குடும்பங்களின் விவரங்கள் அவர்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகங்களினால் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே இடம்பெயர்ந்து இதுவரை மீள்குடியமராத மக்கள் தங்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகத்துடன் தங்கள் பெயர் குறிக்கப்பட்ட பட்டியல் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் க.மகேசன் கேட்டுள்ளார்-என்றுள்ளது.

ஈழநாடு
Eelanadu

## வெளிநாட்டுக்கு பயணிக்க மஹிந்தானந்தவுக்கு அனுமதி



கொழும்பு, ஜூலை 09

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளிநாட்டுப் பயணத்தைத் தொடர்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அமைச்சர் மஹிந்தானந்த மீது தாக்கல் செய்த வழக்கைத் தொடர்ந்து, அவர் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதை உயர்நீதிமன்றம் தடை செய்திருந்தது.

உலக உணவுத் திட்டத்தின் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்ள அமைச்சர் மஹிந்தானந்த இத்தாலி செல்ல வேண்டும் என்று அவரது சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், உயர்நீதிமன்றம் சட்டத்தரணிகளின் கோரிக்கையைப் பரிசீலித்து, அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சர் மஹிந்தானந்த இம்மாதம் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு பயணத்தைத் தொடர்வதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ)





# இரு இராஜாங்க அமைச்சர் பதவிகளில் திடீர் மாற்றம்

## ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூலை 09

**இரண்டு இராஜாங்க அமைச்சுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கான இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.**

அந்தவகையில், சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு, விநியோக ஒழுங்குப்படுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதைகள் உற்பத்தி, உயர் தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சராக, சஷிந்திர ராஜபக்ஷ பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன், கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக மொஹான் டி சில்வா பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவும் பிரசன்னமாகி இருந்தார். (இ)



## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய தலைவராக மஹிந்த ஹத்துருசிங்ஹ

கொழும்பு, ஜூலை 09

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புதிய தலைவராக அதன் பொது முகாமையாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்ஹ நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவினால் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவரான கமல் ரத்வத்தை மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்ஹ நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கூடுதல் பொது முகாமையாளராக (சர்வதேச விவகாரங்கள்) டபிள்யூ.எம்.என். வான்சேகர நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தேர்தல் சட்டங்கள், தேர்தல் முறைமையில் மறுசீரமைப்பு குறித்து 115 முன்மொழிவுகள்



கொழும்பு, ஜூலை 09

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவுக்கு 115 முன்மொழிவுகள் மற்றும் யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தத் தகவலை அக்குழுவின் தலைவரும் சபை முதல்வரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அந்தக் குழுக் கூட்டத்தின்போது தெரிவித்தார்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட 7 அரசியல் கட்சிகளின் மூலம் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும், எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அந்தக் கட்சிகளுக்கு யோசனைகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த யோசனைகளை sec.pscelectionreforms2021@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், பாராளுமன்ற விசேட குழு, இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்க முடியும்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வது தொடர்பில் 2021 ஜூன் 30 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற பொது மக்களின் யோசனைகளை சபைக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த யோசனைகள் பற்றிய சாராம்சம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

உத்தேச மறுசீரமைப்புகள் தொடர்பில் நிபுணர்கள் குழுவொன்றை நியமிப்பது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, கபீர் ஹஷீம், ரஞ்சித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன், மதுர விதானகே மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

## மாணவிகளுக்கு பாலியல் தொல்லை: தொலைத்தொடர்பு ஊழியர் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 09

இணைய கல்வி நடவடிக்கைகளுக்கான இலவச 'சூம்' தொடர்புகளைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் பிரபல தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் ஊழியர் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிடபெத்த பகுதியில் பாடசாலை ஒன்றின் அதிபர் வழங்கிய முறைப்பாட்டில் தமது பாடசாலையின் மாணவிகள் சிலர் இணையத்தளத்தின் ஊடாக பாலியல் தொல்லைக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக மாத்தறை சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இணைய கல்வி நடவடிக்கைகளுக்கான இலவச "சூம்" தொடர்புகளைப் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்து சந்தேகநபர் குறித்த மாணவிகளின் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதன் பின்னர் குறித்த இலக்கங்களுடன் தொடர்புகொண்டு இணையம் ஊடாக மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அதேபோல், சில மாணவிகளின் புகைப்படங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் இலங்கையின் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றுவதுடன், தம்புத்தேகம பகுதியை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-புகழ்,வெற்றிவேல் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- நம்பிக்கைகள்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்